Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 மாசி 28 ஞாயிற்றுக்கிழமை (11.03.2012) பக்கங்கள் 16 ஓசை - 162

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo
20000 Rs only 1st Year
CIMA-UK
14000 Rs. only
founation level Course fee
Computer Engineering - USA
Government Scholarship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/1316)
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction



அமைதி எங்கே?

11




தலைகீழாக இருந்து பெற்றது

13



இந்திய பேராசிரியருக்கு வரவேற்பு

09



யாழ்ப்பாணத்து பெண்கள்...

05

# இலங்கை தொடர்பான தீர்மானம் கண்டிக்கும் நோக்கம் கொண்டதல்ல

## அமெரிக்கா அறிவிப்பு



ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பாக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள தீர்மானம் அந்நாட்டைக் கண்டிக்கும் நோக்கத்துடன் முன்வைக்கப்பட்டவில்லையெனத் தெரிவித்திருக்கும் அமெரிக்கா, இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேச சமூகம், அமெரிக்காவுடன் இணைந்து செயலாற்ற முன்வரவேண்டுமெனவும் அழைப்பு விடுத்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரின் நேற்று முன்தின அமர்வில் உரையாற்றிய ஜெனிவாவிற்கான அமெரிக்கத் தூதுவர் Eileen Chamberlain Donahoe மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை காத்திரமான பல பரிந்துரைகளைக் கொண்டுள்ளபோதிலும், அப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த பொருத்தமான பொறிமுறை ஒன்றையும் இலங்கை அரசாங்கம் இது வரை கொண்டிருக்கவில்லை. அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுற்ற பின்னர் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றே சர்வதேச மற்றும்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி இளைஞர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி குருவளையில் வீட்டில் மின்சாரம் பெறுவதற்காக, மின் இணைப்பு வேலைகளைச் செய்துவிட்டு, அதனைப் பரீட்சிப்பதற்காக மின் இணைப்பு செய்த வேளை மின்சாரம் தாக்கி நேற்றைய தினம் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தில் அளவெட்டி குருவளையைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா - பிரசாத் (வயது - 19) என்பவரே உயிரிழந்தார். மின்சாரம் தாக்கிய நிலையில் உடனடியாகவே உறவினர்களால் சங்கானை வைத்தியசாலைக்கு இவர் கொண்டு செல்லப்பட்ட போதிலும இடைவழியில் உயிரிழந்தார். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எஸ்)

## மீள்குடியேற்றம், நிவாரணம் வழங்கல் யாழ்.செயலகத்தில் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படாதுள்ள மக்களின் நிலை, மற்றும் நிவாரணம வழங்கல் போன்ற விடயங்கள் குறித்து நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் ஆகியோரும் உடனிருந்தனர்.

இதுவரையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மக்களுக்



கான நிவாரணம் வழங்கல், மீள்குடியேற்றப்படாத மக்களுக்கான நிவாரணம் வழங்கல், மீளக் குடியேற்றப்படாத மக்கள் மற்றும் பகுதிகள் என்பன தொடர்பில் இக்கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. இதன் பிரகாரம் 10 ஆயிரத்து 44 குடும்பங்கள் யாழ். மாவட்டத்தில் மீளக்குடியேற்றப்படாத நிலையில் இருப்பதாகவும் இக்குடும்பங்களில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுத்திட்டம் அவசியம்

### அமைச்சர் டியூ - கூறுகிறார்

தமிழ்மக்களின் உண்மையான பிரச்சினைக்கு உரிய தீர்வுத்திட்டங்களை முன்வைக்க வேண்டியது முதன்மையானதென அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் மும்மொழியறிவு இனங்களுக்கு இடையில் நல்லிணக் கத்தை ஏற்படுத்த வழிகோலும். தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினை பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது. இதனால், தமிழ் அரசியல் வாதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை.

1977 ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரக் கொள்கையை நாட்டுக்கு அறிமுகம் செய்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன, பின்னர் தனிச் சிங்கள மொழிக்கொள்கை தொடர்பான யோசனைத் திட்டத்தை முன்வைத்திருந்தார். ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் ஆட்சி நடத்தியிருந்தால் நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டிருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த அர்ப்பணிப்பு வேண்டும்

### அரசுக்கு கூறுகிறார் அகாஷி



கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் சிபாரிசுகளை முழுமையாக அமுல்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென இலங்கைக்கான ஜப்பானிய அரசின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி வலியுறுத்தியுள்ளார்.

ஜப்பான், இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான வலுவான இருதரப்பு உறவுகளின முக்கியத்துவத்தையும் அகாஷி வலியுறுத்தியதுடன், இலங்கைக்கு எப்போதும் ஜப்பான் ஆதரவளிக்கும் எனவும், எப்போது உதவி தேவைப்பட்டாலும் ஜப்பான

(15 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கப் பிரரேரணையை எதிர்க்க அவசரம் காட்டவில்லை அரசு

### என்கிறார் அமைச்சர் பீரிஸ்

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை அமெரிக்கா சமர்ப்பித்துள்ள போதிலும், அதற்கு எதிரான நகர்வுகளை முன்னெடுபபதில் அரசாங்கம் அவசரப்படவில்லை எனவும் அதனைப் பொறுமையுடனேயே அணுகும் எனவும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்புக்குப பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை பற்றிக் கூறமுடியும் என குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ், மேற்குலகின் அழுத்தங்களிலிருந்து தப்புவதற்கான வழிமுறைகளை நாம் கடந்த காலத்தில் கையாண்டுள்ளோம். கூடுதலான அனுகூலங்கள் எம் பக்கம் காணப்படுகின்றன எனவும் ஊடகவியலாளர்களிடம் அவர் நேற்று தெரிவித்தார். இது தொடர்பில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் கடத்தல்

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். நேற்று அதிகாலை ஒரு மணியளவில் வான் ஒன்றில் வந்தவர்களால் இந்த நபர் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இது தொடர்பாக முகத்துவாரம் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## கரைச்சிப் பிரதேச சபைக்கு எதிராக சந்தை வர்த்தகர்கள் போர்க்கொடி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் அடாவடியான செயற்பாட்டினைக் கண்டித்து கிளிநொச்சி சந்தைப் பகுதி வர்த்தகர்கள் நேற்றைய தினம் தமது வர்த்தக நிலையங்களைப் பூட்டி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட முயன்ற சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆறு ப.நோ.கூ.சங்கங்கள் இணைந்து அம்பாள்குளத்தில் இயங்கிவரும் கிளிநொச்சி பொதுச் சந்தையில், தமது பொருட்களை மலிவு விலையில் நேற்றும், இன்றும் விற்பனை செய்வதற்குப் பிரதேச சபையிடம் அனுமதி பெற்றிருந்தன. ஆனால் ஏற்கனவே சந்தையில் வியாபாரம் இல்லாமல் இருக்கும் தம்மிடம், பிரதேச சபை எவ்வித கலந்துரையாடலையும் நடத்தாமல் ப.நோ.கூ.சங்கங்களுக்கு அனுமதி வழங்கியமை குறித்து

(15 ஆம் பக்கம் பார்க்க)

# நெல் அறுவடை ஆரம்பமாகியும் அரிசியின் விலை குறையவில்லை

## துணுக்காய் மக்கள் விசனம்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் அறுவடையை ஆரம்பித்துள்ளனர். துணுக்காய் பிரதேசத்தில் நெல் அறுவடை ஆரம்பித்த போதும் விலை குறைந்தபாடாக இல்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

துணுக்காய் பகுதியில் அரிசியின் விலை 55 ரூபாவிலிருந்து 65 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது நெல் அறுவடையை மேற்கொள்ளும் விவசாயிகளின் நெல்லை தென்பகுதி வியாபாரிகள் 1600 ரூபாவரை கொள்வனவு செய்து வருகின்றனர்.

நெல்லை இங்குள்ள கூட்டுறவு சங்கம், சந்தைப்படுத்தும் களஞ்சியங்கள் விவசாயிகளிடமிருந்து சேமித்து வைக்கும் பட்சத்தில் அரிசியின் விலையை இங்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் எனவும், இதன் மூலம் பெரும் நன்மை கிடைக்கும் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பெரும்போக நெற்செய்கையின் அறுவடை முடிவு பெற்றதும் பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கையை ஆரம்பிக்கவும் விவசாயிகள் தயாராக உள்ளனர்.

தற்போது மல்லாவி அணிஞ்சியன்குளம் கிராம அலுவலர் பிரிவின் கீழுள்ள 2 குளங்களான அணிஞ்சியன்குளம், சொங்கான் குளம் ஆகிய குளங்களின் கீழ் சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (143)

# மருமகனுக்கு வந்தது கோபம் மாமன், மாமி வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

குடும்பத் தகராறில் மருமகன் கதவுக் குறுக்குத் தடியால் மாமனாரைத் தாக்கியுள்ளார்.

இதனை விலக்குப் பிடிக்கச் சென்ற மாமியாரும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார். இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்வியங்காடுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி இராசதுரை (வயது - 49), இராசதுரை பைரவி (வயது - 52) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இருவரையும் தாக்கிய மருமகனை யாழ். பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்)

# திருட்டுச் சம்பவம் இளைஞருக்குப் பிணை

(திருநெல்வேலி)

2012 ஆம் ஆண்டு தை மாதம் இடம்பெற்ற கைத்தொலைபேசி களவு சம்பந்தமாக குப்பிளானை சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். பின்னர் இவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் இவர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கையொப்பம் இடவேண்டும் என இவருக்கு நீதவானால் உத்தரவிடப்பட்டிருந்தது.

ஒரு தடவை இவர் பொலிஸ் நிலையத்திற்கு கையொப்பமிடச் சென்ற வேளை பொலிஸாரினால் மீண்டும் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

2011 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் இவருக்கு தொடர்பு இருப்பதாக இவர் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. இவர் கடந்த 3 வாரங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரணை செய்த யாழ். நீதவான் மா. கணேசராஜா சந்தேகநபரை 5000 ரூபா காசுப்பிணையிலும் 50 ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும் விடுவித்து வழக்கை ஒத்திவைத்தார். (137)

# வணிக மன்றத்தின் வருடாந்த கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று மாலை 3.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வணிமன்றத்தின் தலைவர் வ.பிரகாஷ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான ஊக்குவிப்பு நிதியம், விதவை நிதியம், ஊனமுற்றோர் நிதியம், தந்தையரை இழந்த மாணவர்களுக்கான சைக்கிள் நிதியம் மற்றும் வெள்ளிவிழா கண்ட அங்கத்தவர்களை கௌரவித்தலும், சேமிப்புத் திட்டத்தில் முன்னணியில் உள்ளவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (11)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

அறுகம்பானை - காங்கேசன்துறை ஸ்ரீஇராஜஇராஜேஸ்வரி சிக்கன கடனுதவி வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் 25 ஆவது பொதுக்கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு சிவன் களஞ்சிய சந்தியில் உள்ள முன்னாள் கிராம அலுவலரின் இல்லத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## மகளிர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை மறுதினம் காலை 9.00 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வினை 'யுவ பிறாண்ட்' நிறுவனம், சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.


DAMRO



TECHNICIANS

JAFFNA, VAVUNIYA, TRINCOMALEE

With recent expansions, we seek to recruit suitable males below 30 years of age to be appointed as Technicians.

**APPLICANTS SHOULD :**

- be permanent residents within 25km from the above areas.
- have G.C.E. O/L qualification.
- have completed an electronic certificate course from a recognized technical institute.

Experience will be an advantage.

Total earnings will not be less than Rs. 22,500/= p.m.

If the above positions are of interest to you, please forward a detailed resume with your contact numbers & contact details of two non - related referees to reach us within ten days of this advertisement.

**The Human Resources Manager,**
**DAMRO**
**No: 361, Kandy Road, Nittambuwa.**
**E-mail: hrm@damro.lk**

(R/121)



## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1285)

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1305)

மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு இரக்கப்படு; ஆனால் உன்னுடைய சொந்த துன்பங்களை உன்னிடமே வைத்திரு! - அகிடன் பிரபு -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## முதலில் அவநம்பிக்கையைக் களைவோம்!

"உங்களில் தவறு செய்யாதவர் எவரோ அவர் அந்தப் பெண் மீது முதல் கல்லை வீசட்டும்" என்று இயேசு கிறிஸ்து கூறியதன் பொருளை நாமனைவரும் அறிவோம். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே மனித குலத்துக்கு உணர்த்தப்பட்டுவிட்ட உண்மை அது.

யார்தான் தவறு செய்யாதவர்கள்? தர்மத்தை உணர்த்தப் படைக்கப்பட்ட இதிகாச பாத்திரம் தருமனும் தவறு செய்தான், அடுத்தவரை ஹிம்சிக்காமல் வாழ்ந்து பார்க்க முயற்சித்த காந்தியும் தவறு செய்தார். புராணக் கதைகள் எல்லாம் சொல்வது, தெய்வங்களும் கூடத் தவறுகள் செய்ததாகத்தான். எனில் மனிதர்கள் எம்மாத்திரம்?

நமது இன்றைய நிலைக்கும், நடந்து முடிந்த இழப்புகள் வேதனைகளுக்கும் நாம் யாரும் காரணமில்லை; நாம் பிழையற்றவர்கள் என்று பதுங்கிவிட முடியுமா? குற்றங்களைப் பார்த்துக் கொண்டு வாளாவிருத்தலும், குற்றங்கள் நடைபெற்றது நமக்குத் தெரிந்திருக்கவில்லை என்று கூறுவதும் கூட குற்றங்களை அனுமதித்தவறுதான் என்பதை நாம் மறுக்க முடியாது.

ஆகவே, நாம் அறிந்தோ அறியாமலோ நடந்த தவறுகளைப் புரிந்துகொள்ளுதலும், அவற்றுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுதலுமே நாம் மனிதர்களாக வாழ்வதன் அடையாளமாக முடியும். தவறுகளைப் புரிந்துகொள்வதும், மன்னிப்புக் கோருவதும், மற்றவர்களோடு சேர்ந்துவாழும் பக்குவத்தைப் பெறுவதும் கோழைத்தனமோ மரியாதைக்குறைவோ அல்ல.

நேரடியாகக் குற்றம் செய்தவர்கள் கொலைகள் செய்தவர்கள் நாமில்லை என்று இறந்தவர்களைச் சாட்டிவிட்டு வாளாவிருக்க முடியாது. வாழ்ந்து சாட்சிகளாய் இருந்த அனைவருக்குமே குற்றங்களில் பங்குண்டு. நாம் அனைவருமே மன்னிப்புக் கேட்டாக வேண்டும். ஒவ்வொரு சமூகத்தினரிடமும், ஒவ்வொரு பிரதேசத்தினரிடமும், பாதிப்புற்ற ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் தனித்தனியாக எங்கள் மன்னிப்புகளைக் கேட்டாகவேண்டும்.

எங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்குகளோடு ஒப்பிடுகையில் நாங்கள் இழைத்த தீங்குகள் மிகச்சிறியனவாக இருந்தாலும், எங்கள் தவறுகளுக்காக முதலில் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதில் எந்த இழிவும் இல்லை. நாம் தாழ்ந்து போகப் போவதும் இல்லை.

நடந்து முடிந்த எல்லாத் துயரங்களுக்கும் – நாம் நமது துக்கங்களைப் பதிலியாக வைத்துக்கொண்டு மௌனமாய் அங்கீகரித்திருந்த எல்லாப் படுகொலைகளுக்கும், வன்கொடூரங்களுக்கும் நழுவல் இல்லாமல் நமது எதிர்ப்பையும், பாதிக்கப்பட்டவர்கள் மீதான பரிவுணர்ச்சியையும் நாம் வெளிப்படுத்தியாக வேண்டும்.

'அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் நாம்தானே, முதலில் மற்றவர்கள் மன்னிப்புக் கேட்கட்டும்' என்ற நாயகன் பட நியாயங்களை விட்டுவிட்டு, நாமே முதலில் இறங்கிச் செல்வதில் எந்தக் கேவலமும் இல்லை. விட்டுக்கொடுத்துப் பேசி நமக்கு வேண்டியதை வெல்வதும், மனித உயிர்களைப் பாதுகாத்து முன்னகர்வதுமே உண்மையான வீரமும் உயர் தலைமைப் பண்புமாகும்.

நம் சந்ததியின் நல்வாழ்வுக்காக, நடந்தவற்றை மறப்பதும், உலகமயச் சூழல் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் காட்டும் அரசியல் விவேகமுமே இன்றைய நம் தேவை.

நம்மோடு அடையாள ரீதியாக வேறுபடுகிறவர்கள் பகைவர்களல்ல. அந்த மனிதர்கள் மீது அவநம்பிக்கையோடு எழுகிற அரசியல் வேண்டாம். மற்றவர்களையும் வேறுபாடுகளையும் அங்கீகரித்தே நமது வாழ்வு இருக்க முடியும். வேறுபாடுகளை சகிக்க முடியாது விலக்கியும் பகையாக்கியும் மோதல்களில் ஈடுபட்டு அழிவது முட்டாள்த்தனமாகுமே தவிர நாம் மனிதர்களாக வாழ்கிறோம் என்றாகாது.

மாறுபடுகிறவர்களாலும் மாறுபாடுகளாலும்தான் உலகம் முன்னோக்கி அடி வைக்கிறது. - ஆசிரியர் -

# அமெரிக்கப் பிரேரணையின் நகல் முன்கூட்டியே புலிகளிடம் சென்றது எப்படி?

## கேள்வி எழுப்புகின்றது சிங்கள நாளிதழ்

(கொழும்பு)

வடக்கின் இறுதிக்கட்ட போரில் மனித உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பாக அமெரிக்காவினால் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின் தகவல் முன்கூட்டியே புலிகளின் சர்வதேச வலையமைப்புக்கு கிடைத்து எப்படியென்று சிங்கள நாளிதழ் ஒன்று ஆச்சரியம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவினால் ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை சமர்ப்பிக்கப்படுவதற்கு, 24 மணி நேரத்திற்கு முன்னர், அமெரிக்காவின் குறித்த பிரேரணையின் நகல் புலிகளின் சர்வதேச வலையமைப்புக்கு கிடைத்திருந்ததாக திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இப் பிரேரணை கடந்த 7 ஆம் திகதி பேரவையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், அதிகாலையிலேயே ஐரோப்பா மற்றும் சுவிஸ் ஆகிய நாடுகளில் உள்ள புலிகளின் இணையத் தளங்களில், யோசனை சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறித்த செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

இதனிடையே உலக தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் கடந்த 6 ஆம் திகதி ஜெனிவாவில் அமெரிக்கா மற்றும் சுவிசர்லாந்து அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிப்பதாகவும் திவயின கூறியுள்ளது.

# மாணவியின் படுகொலையை ஊடகங்கள் அரசியலாக்கிவிட்டன

## சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இடம்பெற்ற இளம் மாணவி படுகொலைச் சம்பவத்தை அரசியல் நோக்குடனேயே சில ஊடகங்கள் கையாண்டிருப்பதாக சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளர் கே.றுசாங்கன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் கடந்த எட்டாம் திகதி நடைபெற்ற நெடுந்தீவு முகிலனின் 'வெள்ளைப்பூக்கள்' குறும்பட வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட இந்தக் குறும்பட வெளியீட்டு விழாவில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்தச் சம்பவத்துக்கு நிச்சயம் தண்டனை வேண்டும் இருந்தாலும் இவ்வாறு நடைபெறும் சம்பவங்களை நிறுத்துவது எவ்வாறு எம்மிடம் எத்தனைமாற்றம் வேண்டும். அதனை விடுத்து வெறும் புள்ளி விபரங்களை வைத்துக்கொண்டு சிறுவர் துஷ்பிரயோகம் அதிகதித்துவிட்டது. பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரித்து விட்டது என்று கூறிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை.

தற்போதுதான் இத்தகைய சம்பவங்கள் அதிகரித்திருப்பதாக கொள்ளமுடியாது. என்றும் நடைபெற்ற பிரச்சினை அவை தெரியவில்லை அதுதான் வேறுபாடு யுத்தகாலத்தின்போது இளை ஞர்கள் யுவதிகள் வீடுகளிலேயே படித்தார்கள். ஆனால் யுத்தம் நிறைவடைந்த பின்னர் சகலரும் சுதந்திரமாக நடமாட முடிகிறது. எங்கும் சென்று வரமுடிகிறது. இலத்திரனியல் சாதனங்கள், கையடக்கத்தொலைபேசி பாவனை அதிகரித்திருக்கிறது. இவ்வாறான வன்முறைகள் அதிகரித்திருக்கின்றது. இவ்வாறான நிலைகளினால் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்திருக்கிறது என்று கூறிக்கொண்டிருப்பதில்லை. அதனைத் தடுக்க என்ன வழிகளை நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம் என்று சிந்திப்போம். சமூகத்தின் அனைத்துப் பிரஜைகளும் ஒன்றிணைந்து மாணவர்கள் இளைஞர்கள் ஆகியோரை வழி நடத்தவேண்டும். முகிலன் போன்றவர்களின் இவ்வாறான முயற்சி இதற்கு வலுச்சேர்க்கும் என்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 'வெள்ளைப் பூக்கள்' குறும்படத்தின் முதல் பிரதியை ஈ.எஸ்.பி. நாகரத்தினம் பெற்றுக்கொண்டார். (பா)

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை பங்களாதேஷ் பயன்படுத்த அனுமதி

(கொழும்பு)

புதியதாக நிர்மாணிக்கப்பட்ட அம்பாந் தோட்டை ஆழ்கடல் துறைமுகத்தை பங்களாதேஷ் பயன்படுத்திக்கொள்வதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பயன்படுத்துபவர்கள் கொழும்பிற்குள் செல்லத் தேவையில்லை. இது நேரத்தை மீதப்படுத்தும் என பங்களாதேஷ் நிதியமைச்சர் ஏ.எம்.ஏ.முத்தையா கூறினார்.

இலங்கை - பங்களாதேஷ் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் மாநாடு டாக்காவில் கடந்த 8 ஆம் திகதி நிறைவடைந்தது.

சுமார் இரு தசாப்தங்களின்பின்னர் இலங்கை - பங்களாதேஷ் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழு மீளாய்வு இடம்பெற்றதாகவும், இருதரப்பு வர்த்தகத்தை வினைதிறனாக்குவதற்கு இது வழி வகுத்ததாகவும் இலங்கைத் தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கிய அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

# இலங்கையர் உட்பட மூவருக்கு டுபாயில் சிறைத்தண்டனை

(கொழும்பு)

டுபாயில் 15,000 திர்ஹாம் பெறுமதியான மணிக்கூடு ஒன்றை திருடிய குற்றச்சாட்டில் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூவருக்கு 3 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் டிசம்பர் 10 ஆம் திகதி ஹோட்டல் வாடிக்கையாளர் ஒருவருக்குச் சொந்தமான மணிக்கூட்டைத் திருடியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

பி.சி. என அடையாளப்படுத்தப்பட்ட 34 வயதான பங்களாதேஷ் பிரஜை, என்.எம். என அடையாளப்படுத்தப்பட்ட 31 வயதான இலங்கைப் பிரஜை, எம்.ஏ். என அடையாளப்படுத்தப்பட்ட 21 வயதான இந்தியப் பிரஜை ஆகிய இம்மூவரும கடந்த பெப்ரவரி 9 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு நீதிபதி ஜாஸிம் மொஹமட் அல் பெலோஷி முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் டுபாய் அல் ரபா பகுதியிலுள்ள பிரபல ஹோட்டலொன்றில் சுத்திகரிப்பாளர்களாக பணியாற்றியவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. விசாரணையின்பின் இவர்களுக்கு 3 மாத சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

பாகிஸ்தானைச் சேர்ந்த 50 வயதான வாடிக்கையாளர் ஒருவருக்குச் சொந்தமான மணிக்கூடு ஒன்றையே மேற்படி மூவ்ரும் திருடியதாக குற்றம் சுமத்தப்பட்டது.

# நடிகையை அச்சுறுத்தியவர் தண்ணி இல்லாத காட்டுக்கு

(கொழும்பு)

பிரபல சிங்கள திரைப்படத் தொலைக்காட்சி நடிகையான சனோஜா பிபிலவை கதிர்காம வைத்தியசாலையின் தலைமை மருத்துவ அதிகாரியின் கணவர் அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டை அடுத்து, மிதிதெனியாய கிராமப்புற வைத்தியசாலைக்கு அவர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


நடிகை சனோஜா பிபில அச்சுறுத்தப்பட்ட சம்பவம் சில வாரங்களுக்கு முன்னர் கதிர்காமத்தில் இடம்பெற்றது. திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக சிகிச்சை பெறுவதற்காக குறித்த நடிகை வைத்தியசாலைக்கு சென்றபோது, மருத்துவ அதிகாரியின் கணவர் வாளுடன் நடிகையை அச்சுறுத்தியதாகவும் இவர்கள் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நடிகையின் முறைப்பாட்டைத் தொடர்ந்து சுகாதார அமைச்சு விசாரணையை முன்னெடுத்துள்ளது.

அச்சுறுத்திய மனிதர் அந்த வைத்திய சாலையின் தலைமை வைத்திய அதிகாரியின் கணவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# மக்களின் முன்னேற்றமும் அபிவிருத்தியுமே எமது முக்கியமான இலட்சியமாகும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(வேலணை)

எமது மக்களது முன்னேற்றம், நலன்கள் அபிவிருத்தி போன்றவைதான் எமது அரசியல் கொள்கைகளே அன்றி எமது கட்சியின் வளர்ச்சி நோக்கியதல்ல என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வேலணை மேற்கு அம்பிகை நகரில் அமையப் பெற்றுள்ள ஸ்ரீ மகேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் வசந்த மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இப்பகுதி மக்களுடன் இணைந்து இன்றைய நிகழ்வில் கலந்து கொண்டமை எனக்குப் பெருமகிழ்ச்சியை அளிக்கிறது. இப்பகுதி பல்வேறு தேவைகள் தொடர்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் வேலணைப் பகுதி மட்டுமல்லாது முழுத் தீவகப் பகுதிகளிலும் நிலவிவரும் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் தீவக ஆய்வு மாநாடொன்று விரைவில் நடத்த இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த மாநாட்டின் மூலம் தீவகப் பகுதியின் அனைத்துத் துறைகள் சார்ந்தும் உரிய நிபுணர்கள் குழுவின் மூலம் ஆய்வு நடாத்தப்பட்டு தேவைகள் இனங்காணப்பட்டு அவை தீர்த்து வைக்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

எமது வேண்டுகோளுக்கு இணங்க அரசாங்கம் இவ்வருட வரவு செலவுத்திட்டத்திற்கு மேலதிகமாக சுமார் ஆயிரம் கோடி ரூபா நிதியை வடமாகாணத்திற்கென ஒதுக்கியுள்ளதை இங்கு சுட்டிக்காட்டிய அமைச்சர் இதன் மூலமாக இவ்வருட இறுதிக்குள இப்பகுதியின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் ரமேஷ், ஈ.பி.டி.பி.யின் யாழ்மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் (கமல்), பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா உட்பட பெருமளவு மக்களும் கலந்துகொண்டனர்.

# உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே கார்ட்டூன் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நாடு தழுவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையே சுற்றாடல் கார்ட்டூன் சித்திரப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இலங்கையின் சுற்றாடல் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுக்கான சுற்றாடல் நேயமுள்ள சக்தியைக் கட்டியெழுப்பும் நோக்குடன் தரம் 9, 10, 11 வகுப்பு மாணவர்கள் பங்குபற்றும் போட்டி முதலாம் பிரிவிலும், தரம் 12, 13 வகுப்பு மாணவர்கள் பங்குபற்றும் போட்டி இரண்டாம் பிரிவிலுமாக நடத்தப்படவுள்ளது.

இப்போட்டி கார்ட்டூன் சூழல் தொகுதிகளின் பாதுகாப்பு, சுற்றாடல் மற்றும் பசுமைப் பொருளாதாரம், மனித நடவடிக்கைகளும் காலநிலை மாற்றமும், திணமக் கழிவு முகாமைத்துவம் மற்றும் மீள்சூழற்சி என்ற கருப்பொருளில் கார்ட்டூன் வரையப்பட்டு பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முன் பிரதிப்பணிப்பாளர் நாயகம், சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, 104 டென்சில் கொப்பேக்கடுவ மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்குப் பணப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

# விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்

(சண்டிலிப்பாய்)

அரச நாடகக் குழு மற்றும் கலாசார அலுவல்கள் இலங்கை கலைக் கழகம் ஆகியன ஒன்றிணைந்து நடத்தும் தேசிய நாடக விழாவுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகள் அறநெறிப் பாடசாலைகள், நாடக ஆர்வமுள்ள கலை மன்றங்கள் என்பவற்றில் இருந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இந்த நாடக விழாவில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினருடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கட்டாக்காலி மாடுகளை அடையாளம் காண்பதில் சிரமம்

(வேலணை)

புங்குடுதீவுப் பகுதிகளில் உரிமையாளர்கள் அற்ற கட்டாக்காலி மாடுகள் காணப்படுவதினாலும், மாட்டிறைச்சிக் கடைக்கு என அவற்றினைப் பிடித்து விற்பனை அனுமதிக்கு வரும் போது குறித்த மாட்டின் அடையாளத்தைக் கூறுவதுடன் குறித்த அடையாளத்துடன் பலருக்குச் சொந்தமான மாடுகள் காணப்படுவதினாலும் மாடுகளை விற்பதற்கு அனுமதி வழங்கும் போது கிராம அலுவலர்கள் உரிய முறையில் விசாரணைகளை மேற்கொண்ட பின்பே அனுமதி வழங்க வேண்டியுள்ளதால் காலதாமதம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உரிமையாளரைச் சரியாக இனம் கண்டு மேற்படி நடவடிக்கையை குறுகிய காலத்துக்குள் முடித்துக் கொடுப்பது என்பது கடினமான விடயமாகக் காணப்படுவதாக கிராம சேவையாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் ஒரே குறியுடைய மாடுகள் பலரால் உரிமை கோரப்பட்ட சம்பவங்களும் ஏற்கனவே பலமுறை இடம்பெற்றுள்ள காரணத்தினால் கட்டாக்காலி மாடுகளை அடையாளப்படுத்தி அவற்றினை ஏனையவர்களுக்குப் பங்கிடும் தங்களினது செயற்பாட்டைத் துரிதப்படுத்தி ஒவ்வொரு மாட்டினதும் உரிமைத் தன்மைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் மேற்படி மாட்டிறைச்சிக் கடைக்கு மாடுகளை வழங்கும் செயற்பாட்டைக் குறுகிய காலத்துக்குள் முடிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையைத் துரிதப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு வேலணைப் பிரதேச செயலர் கே.பிரபாகரமூர்த்தி வேலணைப் பிரதேச சபையின் தலைவருக்கு கடிதம் மூலமாகத் தெரிவித்துள்ளார்.

கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தி, எதிர்காலங்களில் நாட்டில் விவசாய உற்பத்தியினை பெருக்கிக் கொள்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடும் நோக்கிலேயே பிரதேச சபைத் தலைவர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டதையடுத்து பிரதேச செயலகத்தினால் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# பாலைதீவு உற்சவத்திற்கு பெருமளவு யாத்திரிகர்கள்

(யாழ்ப்பாணம்)

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதிநாள் நிகழ்வுகளிலும் பூசை வழிபாடுகளிலும் கலந்து கொள்வதற்கு யாழ்-கிளிநொச்சிப் பகுதிகளில் இருந்து நேற்று பெருமளவான யாத்திரிகர்கள் பாலைதீவு நோக்கி பயணமாகினர்.

யாழ்.நகரின் பாசையூர், குருநகர், தீவுப்பகுதிகள், பூநகரி போன்ற பகுதிகளில் இருந்தே பெருமளவான யாத்திரிகர்கள் இவ் உற்சவத்தில் கலந்து கொளவதற்கு படகுகள் மூலம் பயணமாகியுள்ளனர்.

இவர்களுக்கான பயண ஒழுங்குகள் கடற்படையினரால் ஒழுங்கு படுத்தப்பட்டு மேற



கொள்ளப்பட்டுள்ளது.

இம்முறை 2500 வரையான யாத்திரிகர்கள் பாலைதீவு புனித அந்தோனியார் உற்சவத்தில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

பூநகரிப் பிரதேச செயலகம், கடற்படையினர் இணைந்து உற்சவத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

பெருமளவு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் இந்த உற்சவத்தில் கலந்துகொள்வதற்கு வருகை தந்திருக்கின்றனர். இன்று காலை பாலைதீவு புனித அந்தோனியார் கோவிலில் திருவிழா திருப்பலிப் பூசை நடைபெற்று புனித அந்தோனியாரின் திருச்சொரூபப் பவனி இடம்பெற்று உற்சவம் நிறைவடையவுள்ளது.

பூசை வழிபாடுகளை வலைபாடு பங்குத்தந்தை அருட்திரு சிலவேஸ்ரர் நடத்தவுள்ளார். (பா)

# மீள்குடியேறியும் முகாம் வாழ்க்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கற்சிலைமடு-ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டு இரண்டரை ஆண்டுகள் ஆகியும் தமக்கு நிரந்தர வீடுகள் கட்டித்தரப்படவில்லை என இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதி மக்களில் மிகக் குறைந்த அளவினருக்கே நிரந்தர வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இது பற்றித் தெரிவித்த இப்பகுதி மக்கள் மீள் குடியேற்றப்பட்டு மூன்று வருடங்களினை அண்மித்த பொழுதிலும் தாம் முகாம்களில் வாழ்ந்த வாழ்க்கையினையே வாழ்ந்து வருவதாகவும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (42)

# பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 18ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்க மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு செய்யப்படவுள்ளதால் சங்க உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# வேதாகமக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

34 ஆவது வருடாந்த அகில இலங்கை வேதாகமக் கருத்தரங்கு யாழ்.இராசாவின் தோட்டம் ஏ.ஓ.ஜி.சபையில் நடைபெறவுள்ளது.

இயேசு ஜீவிக்கிறார் சர்வதேச சுவிஷேச ஊழியத்தின் மூலமாக நடத்தப்படும் இக்கருத்தரங்கு நாளை மறுதினம் 13ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இச்சபையினரால் நடத்தப்படும் ஆசீர்வாதப் பெருவிழா எதிர்வரும் 16, 17, 18 ஆம் திகதிகளில் யாழ்.சுப்பிரமணியப் பூங்காவுக்கு முன்பாகவுள்ள நகர சபை மைதானத்தில் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (138)

# புனரமைக்கப்பட்ட வீதிகளில் காப்பெற் இடும் பணிகள்


(புதுக்குடியிருப்பு)

ஏ-9 சாலை அகலிக்கப்பட்டுப் புனரமைக்கப்பட்டு வரும் இவ்வேளையில் புனரமைப்புப் பணி முடிந்த இடங்களில் காப்பெற் இடும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் முகாமாலையில் இருந்து புதுக்காட்டுச் சந்தி வரைக்குமான சாலை காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளதால் சகல வாகனங்களும் சாலையில் சௌகரியமாகப் பணிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் மற்றைய இடங்களிலும் வீதிப்புனரமைப்பு, பாலம் திருத்த வேலைகளும் துரித கதியில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (138)

# பூநகரி -நல்லூர் மகாவித்தியாலயத்திற்கு ஒருதொகுதி கணினிகள் கையளிப்பு



(பூநகரி)

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அவர்களின் 2011 ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து பூநகரி -நல்லூர் மகாவித்தியாலயத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட கணினித் தொகுதி ஒன்று நேற்று முன்தினம் அப் பாடசாலைக்கு ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதனினால் பாடசாலைச் சமூகத்திடம் கையளிக்கப்பட்டது.

நகர்ப் பகுதிக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் இயங்கும் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் கல்வித்தரமும் மேம்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கைக்கமைவாக குறித்த பாடசாலையின் மாணவர்களும் கணினி அறிவில் மேம்பாடடைய வேண்டும் என்ற நோக்குடன் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கடந்த 2011ஆம் ஆண்டு தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுதிட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவினை அப்பாசாலையின் கணினிக் கொள்வனவிற்காக ஒதுக்கியிருந்தார். அதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட கணினித் தொகுதியை ஈ.பி.டி.பி யின் கிளநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் கையளித்தார்.

இந்நிகழ்வில் பூநகரிபிரதேசசபை உறுப்பினர் குகேந்திரன், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மானிய விலையில் எரிபொருள் வழங்குமாறு முழங்காவில் விவசாயிகள் கோரிக்கை

(முழங்காவில்)

முழங்காவில் பகுதி விவசாயிகளுக்கு எரிபொருள் மானியம் வழங்க வேண்டுமெனக் கோரி முழங்காவில் கமக்காரர் அமைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு மகஜர் ஒன்றை அனுப்பவுள்ளதாக கமக்காரர் அமைப்பின் செயலாளர் வை.மோகநாதன் தெரிவித்துள்ளார்.

விவசாய உற்பத்தியில் முன்னோடிகள் கிராமமாக விளங்கும் முழங்காவிலில் விவசாயச செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் தற்போதைய எரிபொருள் விலையேற்றத்தினால் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர்.


குறிப்பாக முழங்காவில் பகுதியிலுள்ள கிணறுகள் மிகவும் ஆழமானவை. இந்தக் கிணறுகளிலிருந்து விவசாயச் செய்கைக்கான நீரைப் பெற்றுக கொள்ள டீசல் இயந்திரமே பயன்படுத்தப்படுகின்றது.

தற்போது எரிபொருள் விலை அதிகரித்த நிலையில் அதிக செலவுடன் விவசாயச் செய்கையில் ஈடுபடுவதால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர்.

அத்துடன் விவசாயச் செய்கைக்காக வங்கிகளில் பெருமளவில் கடன்களை விவசாயிகள் பெற்றுள்ளனர்.தற்போது சந்தைகளில் மரக்கறிகள், பழங்கள் மலிவாகக் கிடைப்பதனால் வங்கிகளில் பெற்ற கடனைக்கூட செலுத்த முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே இவற்றைக் கருத்தில கொண்டு முழங்காவில் பிரதேச விவசாயிகளுக்கு எரிபொருள் மானியம் வழங்க வேண்டுமென கமக்காரர் அமைப்பு தனது மகஜரில் தெரிவிக்கவுள்ளது. இந்த மகஜர் ஈ.பி.டி.பி நடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மூலம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

# குப்பைக் கழிவுகளால் வீதிகளில் துர்நாற்றம்; பயணிகள் விசனம்



(கரணவாய்)

நெல்லியடி விக்னேஸ்வரா வீதியில் இருந்து கலட்டிப் பகுதிக்குத் திரும்பும் வீதியின் இருபக்கமும் கொட்டப்படும் குப்பைகளால் துர்நாற்றம் வீசுவதாக அவ்வீதியுடாகப் பயணிப்போர் தெரி விக்கின்றனர்.

குறித்த வீதிப்பகுதியில் கொட்டப்படும் கழிவுகளை கால்நடைகள் கிளறி அசுத்தப்படுத்துவதால் சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுவதுடன் சூழல் மாசுபடுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இப்பகுதியில் குடியிருக்கும் மக்களும் இங்கு கொண்டுவந்து குப்பைகளைக்கொட்டாது குப்பை ஏற்றும் வாகனங்களிடம் கொடுத்தால் இவ்வாறான அசௌகரியங்கள் ஏற்படாது எனவும் இது தொடர்பாக பொதுமக்கள் சிந்தித்துச் செயற்படுவதுடன் கொட்டப்பட்ட கழிவுகளை அகற்ற கரவெட்டி பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பயணிப்போரால் கோரப்படுகிறது.

(18)

# யாழ்ப்பாணப் பெண்கள் கௌரவமாக வாழ்பவர்கள்

## –வைத்திய கலாநிதி முல்லை பரமேஸ்வரன்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்தில் உள்ள பெண்கள் கௌரவமான வாழ்வு வாழ்பவர்கள். அவர்களுக்கென தனியான தனித்துவம் உண்டு. கல்வி, வேலை வாய்ப்பு என்பவற்றில் பெண்களின் வகிபாவம் மேலோங்கி காணப்படுகின்றது. ஆண்களுடன் அவர்ளோடு அவர்கள் சமத்துவ நிலையில் உள்ளார்கள் என தெரிவித்தார். யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியக் கலாநிதி முல்லை பரமேஸ்வரன்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சொண்ட் நிறுவன அனுசரனையுடன் யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, கோபபாய் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மன்றங்கள் இணைந்து நடத்திய பரிசளிப்பு மற்றும் மகளீர் தின விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆவரங்கால் சிவசக்தி மாயி மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர், சில பெண்கள் ஆண்களின் தலைமைத்துவம் இல்லாத நிலையில் துரதிர்ஷ்டவசமாகப் பல துன்ப துயரங்களை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகின்றார்கள். சில இடங்களில் இரவு தனியே செல்லவேண்டி ஏற்படுகின்றது. அதிகரித்த சுமை களை அவர்கள் சுமக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். பாலியல் துன்பங்கள் இவர்களுக்கு அதிகமாகவுள்ளது.

பெண்கள் வினைத்திறன் உள்ளவர்கள். சமூகத்தில் நல்ல பிள்ளைகளை உருவாக்குவதில் பெண்களின் பங்கு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. சமூகத்தில் சிற்பிகளை உருவாக்குபவர்கள் பெண்களே எனக் கூறினார்.

இந்நிகழ்வில் சர்வதேச மகளிர் தின கட்டுரை, கவிதை, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. யாழ்.பல்கலைக்கழக உப வேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், வடமாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ஆகியோருக்கு பெண்களின் உயர் நிலை பதவிக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

மகளிர் தின சிறப்புக் கருத்துக்களம், வில்லிசை, நடனம், மற்றும் பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. பெண்கள் அமைப்புக்கள் பல கௌரவிக்கப்பட்டன. (137)

# வாகனங்கள் ஓட்டப்போட்டி; பயணிகள் பெரும் அச்சம்

(புதுக்குடியிருப்பு)

ஏ-9 சாலையில் வாகனங்கள் போட்டா போட்டி போட்டு ஓடுவதால் அதில் பயணம் செய்யும் பயணிகள் தங்கள் உயிருக்கு அஞ்சிய நிலையில் பயணிப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

குறிப்பாக தூரப்பயணங்களை மேற்கொள்ளும் சில தனியார் பேருந்துகளே இவ்வாறு போட்டி போட்டு ஓடுவதால் பயணிகள் அச்சப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஓட்டுநர்களின் இப்பொறுப்பற்ற செயற்பாடுகளால் சாலைகளில் அநாவசியமான உயிரிழப்புக்கள் ஏற்படுவதோடு, அப் பேருந்துகளில் பயணம் செய்பவர்கள் உளத்தாக்கத்திற்கு உள்ளாவதாகவும், சாலைக்கண்காணிப்புப் பொலிஸார் இவ்வாறு வேகமாகப்பயணிக்கும் பேருந்துகள் மீது நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (138)

# முகாமைத்துவ கற்கைகள் பீட பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதில் 3ஆம்,4ஆம் வருட வணிகமாணி/ தொழில் நிர்வாகமாணி-இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள்-2010, 1ஆம், 2ஆம் வருட வணிகமாணி/ தொழில் நிர்வாகமாணி- இரண்டாம் அரையாண்டு மீள் பரீட்சைகள் 2010, 1ஆம்,2ஆம்,3ஆம் வருட (புதிய கட்டமைப்பு) தொழில் நிர்வாகமாணி முதலாம் அரையாண்டு பரீட்சைகள் 2011 ஆகிய பரீட்சைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தினால் இப்பரீட்சைகள் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு 50 ரூபா பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கி கிளையில் செலுத்திய பற்றுசீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மாணவர்கள் பீடாதிபதி அலுவலகத்தில் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பதிவாளர் அறிவித்துள்ளார்.

# முரசின் இன்றைய பலன்


**(11.03.2012 -ஞாயிற்றுக்கிழமை)**

கர வருஷம் மாசி மாதம் 28 ஆம் திகதி. திருதியை முற்பகல் 9.43 வரை. நட்சத்திரம் சித்திரை பிற்பகல் 3.59 வரை. சித்தயோகம். சங்கடஹர சதுர்த்தி.
இராகுகாலம் 4.52 - 6.22 வரை. சுபநேரம் 9.22 - 10.52 வரை.
எமகண்டம் 12.22 - 1.52 வரை. குளிகைகாலம் 3.52 - 4.52 வரை.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | சுபச்செலவு, குழப்பமானசூழ்நிலை, வைத்தியசெலவு, தேவைக்கேற்ற பணவரவு. |
| ரிஷபம் | விவாகர வெற்றி, மனதில் நிம்மதி, எதிர்பாராத பணவரவு, உறவினர் ஆதரவு. |
| மிதுனம் | தனவரவுகள், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொட்டது துலங்கும், அரச உதவிகள். |
| கடகம் | மனை விருத்தி, உறவினரால்சஞ்சலம், பயணம் தவிர்க்கவும், பொறுப்புக்களைச் சமாளிக்கவும். |
| சிம்மம் | போட்டிகள், தந்தை மூல பணவசதி, குடும்பப பிரிவுக்கு இடமுண்டு, எதிர்பாராத இலாபம. |
| கன்னி | நல்ல தகவல், உடல் ஆரோக்கியம், நினைத்தது நிறைவேறும், அதிர்ஷ்டம். |
| துலாம் | கௌரவம், அதிகாரிகள் நட்பு, புதிய முயற்சி, மன உழைச்சல். |
| விருச்சிகம் | உற்சாகம், பணவரவுகள், பணிச்சுமை அதிகரிக்கும், திடீர் பயணங்கள். |
| தனுசு | விருந்தோம்பல், எதிர்ப்புகள் விலகும், குடும்பத்தில் மகிழ்ச்சி, முயற்சியில் வெற்றி. |
| மகரம் | குழப்பம், நண்பர்களால் உதவி, குடும்பத்தில் ஒற்றுமை, அனாவசிய செலவுகள். |
| கும்பம் | கடவுள் பக்தி, தொழில் மூல இலாபம், தேவையற்ற இடமாற்றம், சொத்துக்களால் இலாபம். |
| மீனம் | பயணம் தவிர்க்கவும், வீண் செலவுகள், பேச்சில் நிதானம் நன்று, நிம்மதிக்குறைவு. |

படப்பிடிப்பு: சுரேஷ்

# வீரர்களின் பொறுப்பான ஆட்டத்தால் போட்டியை சமப்படுத்திய மத்திய கல்லூரி

## தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்தது சென். ஜோன்ஸ்



(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்களின் பொறுமையான, நிதானமான ஆட்டத்தின் மூலம் வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவடைந்தது.

இலங்கை வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் சென். ஜோன்ஸ் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான 106ஆவது வடக்கின் பெரும் போர் மூன்று நாள் இனிங்ஸ் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நிறைவடைந்தது.

போட்டியின் முதல் நாள், இரண்டாம் நாள் ஆட்டங்கள் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் ஆதிக்கத்தில் இருந்தது. இந்நிலையில் போட்டியின் இறுதி நாளான நேற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் ஆதிக்கம் தொடரும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

மத்திய கல்லூரி அணி தனது இரண்டாவது இனிங்ஸில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது. ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டு 20 நிமிடத்திற்குள் யாழ். மத்திய கல்லூரிக்கு பெரும் அதிர்ச்சி அளிக்கும் வகையில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினால் நான்காவது விக்கெட்டும் வீழ்த்தப்பட்டது.


இந்த நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக சௌமிதரனுடன் இணைந்த வதூசனன் அணியின் நிலையை உணர்ந்து மிகப் பொறுமையாக, நிதானமாக ஆடி சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் பந்து வீச்சாளர்களைக் களைப்படைய வைத்ததுடன் அணியின் ஓட்ட எண்ணிக்கையையும் அதிகரித்தார். இந்த ஜோடி ஐந்தாவது விக்கெட்டுக்காக 93 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றதுடன் பொறுமையாக ஆடினால் எதிரணிக்கு நெருக்கடியை ஏற்படுத்த முடியும் என்பதைச் சக வீரர்களுக்கு உணர்த்தும் வகையிலும் ஆடியிருந்தனர். தொடர்ந்து வந்த ஒவ்வொரு வீரரும் அதிக ஓட்ட எண்ணிக்கையைப் பெறவேண்டும் என்று எண்ணாமல் அதிக பந்துகளை எதிர்கொள்ளவேண்டும் என்ற மன உறுதியுடன் வந்தனர். இந்த நிலையில் ஒரு சீரான இடைவெளியில் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டது. எனினும், ஒன்பதாவது விக்கெட்டுக்காக இணைந்த கனிக்ஷ்ரன், மற்றும் நிசாந்தரூபன் மத்திய கல்லூரி அணிக்கு மீண்டுமொரு சிறந்த இணைப்பாட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தனர். ஒன்பதாவது விக்கெட்டுக்காக இவர்கள் இருவரும் 71 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இறுதியில் போட்டி நிறைவுக்கு வந்தவேளை, 138 ஓவர்களை எதிர்கொண்ட யாழ். மத்திய கல்லூரி அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 288 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் 133 பந்துகளை எதிர்கொண்ட கனிஷ்ரன் 10 பவுண்டரிகள் அடங்கலாக 72 ஓட்டங்களையும், வதூசனன் 101 பந்துகளை எதிர்கொண்டு 5 பவுண்டரிகள் அடங்கலாக 51 ஓட்டங்களையும், டர்வின் 146 பந்துகளை எதிர்கொண்டு ஒரு பவுண்டரியுடன் 26 ஓட்டங்களையும், சௌமிதரன் 122 பந்துகளை எதிர்கொண்டு 6 ஓட்டங்களையும், நிரோஜ் 109 பந்துகளை எதிர்கொண்டு 6 பவுண்டரிகள் அடங்கலாக 41 ஓட்டங்களையும், ஆட்டமிழக்காது நிசாந்தரூபன் 88 பந்துகளை எதிர்கொண்டு ஒரு பவுண்டரியுடன் 15 ஓட்டங்களையும் பெற்று இப்போட்டியை சமப்படுத்த துணைபுரிந்தனர்.

10 பந்து வீச்சாளர்களைப் பயன்படுத்திய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, மத்திய கல்லூரி அணியின் பொறுமையான ஆட்டத்திற்கு முன் மண்டியிடவே செய்தது. இதில் சன்சயன் 30 ஓவர்கள் பந்து வீசி 45 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், பிரிந்தாபன் 22 ஓவர்கள் பந்து வீசி 69 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இதன் மூலம் 106ஆவது வடக்கின் பெரும் போர், மூன்று நாள் இனிங்ஸ் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவடைந்தது. யாழ். மத்திய கல்லூரி முதல் இனிங்ஸில் 144 ஓட்டங்கள். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸில் 237 ஓட்டங்கள்.

இப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ். மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த கலிஷ்ரனும், சிறந்த பந்து வீச்சாளராக சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த விந்தரங்கனும், சிறந்த களத்தடுப்பாளராக சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கபிலனும், சிறந்த சகலதுறை வீரராக யாழ். மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த வதூசனனும், போட்டியின் ஆட்டநாயகனாக சென். ஜோன்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த சன்சயனும் தெரிவானார்கள்.

இதேவேளை, கடந்த ஐந்து வருடங்களாக தோல்வியைத் தழுவி வந்த சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இப்போட்டியை சமன் செய்து யாழ். மத்திய கல்லூரி அணியின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இரு அணிகளுக்குமிடையிலான பத்தாவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (42, 20)

# வெற்றிக்கு முற்றுப்புள்ளி



(யாழ்ப்பாணம்)


யாழ். மத்திய கல்லூரி அணியின் தொடர் வெற்றிக்கு இப்போட்டி மூலம் முற்றுப்புள்ளி வைத்திருப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம் என சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் தலைவர் அட்றியன் தெரிவித்தார்.

106 ஆவது வடக்கின் பெரும் போர் மூன்று நாள் இனிங்ஸ் போட்டி குறித்து எமது செய்தியாளர் எஸ். தவ-நேசன் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இப்போட்டியில் முதலிருநாள் நாம் ஆதிக் கம் செலுத்தி வந்தோம். இருப்பினும் மூன்றாம் நாள் ஆட்டத்தின் போது சில பிடிக்களைத் தவறவிட்டமையே போட்டியின் போக்கு மாற்றமடைந்தமைக்குக் காரணம். மேலும் மத்திய கல்லூரி அணி வீரர்களான கலிஷ்ரன், வதூசனன் ஆகியோர் நெருக்கடி நேரத்தில் திறமையாக ஆடி எமக்கு அதிக அழுத்தத்தைத் தந்தனர். இதுவே போட்டியின் திருப்புமுனையாகவும் அமைந்திருந்தது.

இருப்பினும், கடந்த ஐந்து வருடங்களாக நாம் அடைந்த தோல்விக்கு இப்போட்டியின் மூலம் முற்றுப்புள்ளி வைத்திருப்பதில் மகிழ்ச்சியே எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (42)

# சமமானது மகிழ்ச்சி



(யாழ்ப்பாணம்)

நெருக்கடியிலிருந்து மீண்டும் போட்டியை சமப்படுத்தியது மிகுந்த மகிழ்ச்சி என யாழ். மத்திய கல்லூரி அணியின் தலைவர் கோகுலன் தெரிவித்தார்.

106ஆவது வடக்கின் பெரும் போர் மூன்று நாள் இனிங்ஸ் போட்டி குறித்து எமது செய்தியாளர் எஸ். தவநேசன் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இப்போட்டியில் என்றுமில்லாத அளவிலான அழுத்தமும்,சவாலும் எமக்கிருந்தது. இதனை உணர்ந்து எமது வீரர்கள் மிகச் சிறப்பாக ஆடினர். அதன் மூலம் சிறந்த இணைப்பாட்டம் இரண்டு எமக்குக் கிடைத்ததுடன் இரண்டாவது இனிங்ஸில் அதிக ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ளவும் துணைபுரிந்தது. இதில் குறிப்பாக, கலிஷ்ரன், டர்வின், வதூசனன், நிரோஜ் சிறப்பாக ஆடி எதிரணிக்கு அதிக நெருக்கடியைக் கொடுத்தனர்.

அந்த வகையில் இப்போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்ததில் மகிழ்ச்சி. அதற்கு எமது பயிற்சியாளர் சுரேஸ்மோகன் தக்க தருணங்களில் எமக்கு சிறப்பான ஆலோசனைகளைத் தந்து எம்மை உற்சாகப்படுத்தினார். இவற்றின் மூலம் எமது வீரர்கள் சிறப்பாக ஆடியமையால் இப்போட்டியை சமப்படுத்தியது எனக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (42)

# சண்டிலிப்பாய் கோட்ட கரப்பந்தாட்ட முடிவுகள்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட கரப்பந்தாட்டப் போட்டிகள் மானிப்பாய் ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

15 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மாதகல் சென்.ஜோசப் விளையாட்டுக்கழகத்தை 25:20, 25:22 என்றஅடிப்படையில் மோதி வெற்றியீட்டியது.

17 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் - மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியுடன் மோதி 18:25, 21:25 என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றியீட்டியது.

19 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மானிப்பாய் இந்துக் கல்லூரியுடன் மோதி 25:23,25:22 என்ற அடிப்படையில் வெற்றியீட்டியது. (93)



கரியாலை நாகபடுவான் இலக்கம் - 3 அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் மாணவர்களின் இசைவும் அசைவும் நிகழ்வை காணலாம்.

# தெல்லிப்பளை கோட்ட வலைப்பந்து; 10ஆவது ஆண்டாகவும் யூனியன் சம்பியன்




(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவின் பரபரப்பான ஆட்டம் ஒன்றில் தொடர்ந்து 10ஆவது வருடமாகவும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி சம்பியனாகியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் யூனியன் கல்லூரி அணி தனது தொடர் சாதனையை தக்க வைப்பதற்காக மிகவும் நிதானமாகவும் சம்பியன் கிண்ணத்தை வெல்லும் உறுதியுடனும் விளையாடியது.

பலத்த கரகோசத்திற்கு மத்தியில் இடம் பெற்ற இந்தப் போட்டியின் இறுதி யில் 24:10 என்ற அடிப்படையில் மகாஜனாக் கல்லூரி அணியை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வீழ்த்தியது. இதன் மூலம் தொடர்ந்து 10ஆவது ஆண்டாகவும் யூனியன் கல்லூரி கோட்ட மட்ட சம்பியனானது. (93)

## வசந்தினி முன்பள்ளி விளையாட்டு விழா

(முழங்காவில்)

கிராஞ்சி வசந்தினி முன் பள்ளியின் விளையாட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் முன் பள்ளி ஆசிரியை சுஜாந்தினி தலைமையில் நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக அமெரிக்கன் மிசனைச் சேர்ந்த அருட்தந்தை லூக் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக பூநகரிப் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளர் நிர்மலறொபின்சனும் அந்தப் பகுதி இராணுவ அதிகாரி, பாடசாலை அதிபர்களும் கலந்து சிறப்பித்தனர். (112)

விளையாட்டு செய்திகள்

## பூநகரிக்கோட்ட மெய்வல்லுநர் போட்டி

(முழங்காவில்)

பூநகரிக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டி 13,14, 15ஆம் திகதிகளில் முழங்காவில் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாக பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (112)

## பூநகரி பெரு விளையாட்டு வெற்றிபெற்றோர் விபரம்

*(நேற்றையதொடர்ச்சி)*

பூநகரிப் பிரதேச செயலக விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள் பூநகரிப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் அ.பிரபாகரனால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**எல்லே ஆண்கள்** - முதலாமிடம் - இரணை மாதா நகர் சென். மேரிஸ், இரண்டாமிடம் - முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழகம்.

**கரப்பந்து ஆண்களா** - முதலாமிடம் - வலைப்பாடு சென். ஆன்ஸ் விளையாட்டுக்கழகம், இரண்டாமிடம் - கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழகம்.

**கரப்பந்து பெண்களா** - முதலாமிடம் - வலைப்பாடு ஜெக மீட்பர் விளையாட்டுக்கழகம், இரண்டாமிடம் - தம்பிராய் அண்ணா விளையாட்டுக்கழகம்.

**உதைபந்தாட்டம் பெண்களா** - முதலாமிடம் - வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழகம், இரண்டாமிடம் - இரணைமாதா நகர் சென. மேரிஸ் விளையாட்டுக்கழகம். (112)

# இணைப்பாட்டம் அமையாததால் தோல்வி



**மஹேல ஜெயவர்த்தன**

முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் சரியான சோடி அமையாததால் தான் தோல்வி அடைந்தோம் என இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியா, இலங்கை, இந்தியா அணிகளுக்கு இடையே நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போடடித தொடரில் இறுதிச் சுற்றுவரை போராடி வந்த இலங்கை அணி இறுதியில் தோல்வியைத் தழுவி கிண்ணத்தை இழந்தது.

இதுகுறித்து இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன கூறுகையில், 232 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை அவுஸரேலியா நிர்ணயித்ததால் நாங்கள் எளிதில் வெற்றி பெற்று விடுவோம் என்றே கருதினோம்.

ஆனால் தொடக்கத்திலேயே முன்னணி வீரர்கள் ஆட்டமிழந்தது அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தி விட்டனர். மேலும் இந்த ஆட்டத்தில் நிலைத்து நின்று ஆட சரியான ஜோடி அமையவல்லை. நாங்கள் சரியாக திட்டமிடவில்லை, இது தான் தோல்விக்கு காரணம் என்று தெரிவித்துள்ளார்.

## ஒருநாள் போட்டித் தரவரிசை; தொடர்ந்து அவுஸ்ரேலியா முதலிடம்

சர்வதேசக் கிரிக்கெட் கவுன்சிலின் ஒருநாள் தரவரிசைப் பட்டியலில் அவுஸ்ரேலிய அணி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

இருப்பினும் அவுஸ்ரேலிய அணி முத்தரப்புத் தொடரில் 11 ஆட்டங்களில் 5இல் தோல்வி கண்டதால், 3 ரேட்டிங் புள்ளிகளை இழந்துள்ளது.

தென் ஆபிரிக்க அணியை விட 9 புள்ளிகள் முன்னிலையில் உள்ளது அவுஸ்ரேலியா. ஏப்ரல் 1ஆம் திகதி வரை அவுஸ்ரேலியா அணி தொடர்ந்து முதலிடத்தில் இருக்கும் பட்சத்தில் சிறந்த ஒருநாள் அணிக்கான ஐ.சி.சி.யின் பரிசுத் தொகையை தொடர்ந்து 3ஆவது ஆண்டாக பெற்றுவிடும்.

அடுத்து அவுஸ்ரேலிய அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது. அதில் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. அனைத்துப் போட்டிகளிலும் தோல்வியடைந்தால் மட்டுமே அவுஸ்ரேலிய அணிக்குத் தரவரிசையில் சறுக்கல் ஏற் படும்.

2ஆவது இடத்தில் இருக்கும் தென் ஆபிரிக்க அணியோ, 3ஆவது இடத்தில் இருக்கும் இந்திய அணியைவிட ஒரு புள்ளியே அதிகமாகப்பெற்றுள்ளது. இலங்கை அணி 4 ஆவது இடத்தில் உள்ளது.

# அவுஸ்ரேலிய அணிக்கு அபராதம்

சிபி முக்கோண ஒருநாள் கிரிக்கட் தொடரில் இடம்பெற்ற மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டியின்போது மெதுவாகப் பந்துவீசியதன் காரணமாக அவுஸ்திரேலிய அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

போட்டி மத்தியஸ்தர் கிறிஸ் ப்ரோட் இந்த அபராதத்தை விதித்தார். போட்டியில் ஒரு ஓவரை தாமதாக வீசியதன் காரணமாக அணியின் தலைவர் ஷேன் வொட்சனுக்கு 20 சதவீதமும், அணி வீரர்களுக்கு போட்டி ஊதியத்தின் 10 சதவீதமும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 12 மாதங்களுக்குள் இன்னொரு தடவை மெதுவான ஓவர் வீதம் சம்பந்தமான குற்றச்சாட்டுக்கள் சிக்கினால் ஷேன் வொட்சனுக்கு ஒரு போட்டித் தடை விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் இன்று ஆரம்பம்

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் தொடங்குகிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன. இப்போட்டியில் 6 தகுதிச் சுற்று ஆட்டங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு அணியும் எதிர் அணிகளுடன் தலா ஒருமுறை மோதும்.

புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் மார்ச் 22ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் மோதும்.

வங்கதேசம் மிர்பூரில் உள்ள ஷேர் பங்களா நேஷனல் வளாகத்தில் அனைத்துப் போட்டிகளும் நடைபெற உள்ளன.

போட்டிகளின் விபரம்:

மார்ச் 11: வங்கதேசம்- பாகிஸ்தான்.
மார்ச் 13: இந்தியா- இலங்கை.
மார்ச் 15: பாகிஸ்தான்- இலங்கை.
மார்ச் 16: இந்தியா- வங்கதேசம்.
மார்ச் 18: இந்தியா- பாகிஸ்தான்.
மார்ச் 20: வங்கதேசம்- இலங்கை.
மார்ச் 22: இறுதிப்போட்டி.

10 முறை நடைபெற்றுள்ள ஆசியக் கிண்ணத் தொடரில் 5 முறை இந்திய அணியும், 4 முறை இலங்கை அணியும், ஒருமுறை பாகிஸ்தான் அணியும் கிண்ணத்தை வென்றுள்ளது.

# படைவீரர்களைக் காட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஒருபோதும் தயாராக இல்லை



(கொழும்பு)

பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்டு பூரண சுந்திரத்தைப் பெற்றுத்தந்த படைவீரர்களைக் காட்டிக் கொடுக்க அரசு தயாராக இல்லை என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தேசிய வீரர்களாக அரசு அவர்களைப் பாதுகாக்க வேணடும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அமர்வுகள் இடம் பெற்ற போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். சர்வதேசம் இலங்கை மீது பலவிதமான அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறது.

இருந்தபோதும், அவர்கள் முன்னிலையில், பயங்கரவாதத்தை முறியடித்த இராணுவத்தினரைக் காட்டிக்கொடுக்கப் போவதில்லை என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

## இந்தியாவிலிருந்து நீந்தி வந்தவர் கைது

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து தலைமன்னாருக்கு நீந்தி வந்த இலங்கைப் பிரஜை ஒருவர் தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். 2007 மார்ச் 23 ஆம் திகதி இந்தியாவுக்குக் கடல்மார்க்கமாக சென்றிருந்த அவர் நீந்தி தலைமன்னாருக்கு கடந்த வாரம் வந்தபோதே பிடிபட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், காளிகோவில் பிரதேசத்தைச் சேர்ந்த இவர் கடற்படையினரால் மேலதிக விசாரணைக்காக தலைமன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## இரண்டாம் முறையும் மரண தண்டனை

(கொழும்பு)

தெரணியகலையில் ஆட் கொலைச் சம்பவத்தில் குற்றவாளியாக காணப்பட்ட அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கேகாலை மாகாண மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்துள்ளது.

2002 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி ஒருவரைத் தாக்கிக் கொலை செய்தமை தொடர்பில் தெரணியகல பொலிஸார், சந்தேகநபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருநதனர். சந்தேகநபருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகமின்றி உறுதி செய்யப்பட்டுள்ளதாக மேல் நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

## எப்பாவெலவில் விபத்து ஸ்தலத்தில் ஒருவர் பலி

(கொழும்பு)

வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்று மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவரை மோதியதையடுத்து அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை எப்பாவெல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து அந்தப் பகுதியில் அசாதாரண நிலையேற்றபட்டதுடன் பிரதேச மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்ததுடன் வீதிகளுக்கு குறுக்காக டயர்களைப் போட்டு எரித்துள்ளனர். காயமடைந்த வாகனத்தின் சாரதி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கிராமத்துக்குக் கிராமம் இதயங்களுடன் இதயம் சங்கமம்

(கொழும்பு)

கிராமத்துக்குக் கிராமம் இதயத்துக்கு இதயம் இளைஞர் பரிமாற்றம் முகாம் என்னும் தென்னிலங்கை இளைஞர் யுவதிகள் கலந்துகொண்ட நான்கு நாள் பரிமாற்ற ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் வவுணதீவில் இடம் பெற்றது.

வவுணதீவுப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட விலாவட்டவானில் சர்வோதயம் அமைப்பினால் இந்த உறவுப்பால இளைஞர் பரிமாற்ற முகாம் நடத்தப்பட்டது.

சர்வோதயம் அமைப்பின் கிழக்குப்பிராந்திய இணைப்பாளர் ஈ.எல்.ஏ.கரீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அமைப்பாளரும் மீள்குடியேற்ற பிரதியமைச்சரின் இணைப்புச் செயலாளருமான ருத்திரமலர் ஞானபாஸ்கரன், பிரதேச செயலாளர் வில்வரட்ணம், பிரதேச சபையின் தவிசாளர் சுப்ரமணியம், சாந்தி சேனா தலைவர் ரவீந்திர ஹெட்டகே உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது விலாவட்டவான் விநாயகர் ஆலயத்தில் இருந்து இளைஞர் யுவதிகள், அதிதிகள் பல்வேறு கிராமிய கலை நிகழ்வுகளுடன் அழைத்து வரப்பட்டு விலாவட்டவான் விநாயகர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வுகளில் பதுளை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலும் இருந்து சுமார் 150 மூவினங்களையும் சேர்ந்த இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.

## கட்சிக் கூட்டங்களில் எம்.பி.க்கள்; ஐ.தே.கட்சி புதிய நடைமுறை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்துப் பொது நடவடிக்கைகளிலும் அக்கட்சியின் பிரதான உத்தியோகத்தர் மற்றும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்டாயமாகப் பங்கேற்க வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது.

கட்சியினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற அரசியல் மற்றும் வேறு பொது நடவடிக்கைகளின் போது அவர்களின் பங்களிப்பு எதிர்வரும் காலங்களில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இதேவேளை, உத்தியோகத்தர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொது நிகழ்வுகளில் பங்கெடுக்க முடியாத பட்சத்தில் அது குறித்து கட்சியின் பொது செயலாளருக்கு முன்கூட்டியே அறிவிக்குமாறும் கேட்கப்பட்டிருக்கிறது.

கடந்த 2 மாத காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரசியல் செயற்பாடுகள் பலவற்றுக்கு சில அரசியல் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை என குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இதன்காரணமாகவே, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## குடிசன மதிப்பீட்டுப் பணிகள் தேவை ஏற்பட்டால் தொடர்புகொள்க

(கொழும்பு)

குடிசன மதிப்பீடுத் தொடர்பில் மேலதிக தகவல்களை அறிந்து கொள்வதற்காக விசேட தொலைபேசி இலக்கங்களை குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

பெப்ரவரி 27ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட குடிசன மதிப்பீடு எதிர்வரும் 19ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இநத மதிப்பீட்டை அடுத்தே விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது நடைபெறும் குடிசன மதிப்பீடு தொடர்பில் தகவல் அறிய விரும்புபவர்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள 3 தொலைபேசி இலங்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்த முடியும்.

0112689595, 0112688383 மற்றும் 0112683737 ஆகிய இலக்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்துவதன் மூலம் தகவல்களினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## "சேனக பிபில" மருந்துக் கொள்கை அமுலாக வேண்டும் தரம் குறைந்த மருந்துகளால் உயிராபத்து அதிகம்

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

சேனக பிபில மருந்துகொள்கையை அரசாங்கம் உடனடியாக அமுலாக்க வேண்டுமெனவும் இல்லாதுவிடின் தரம் குறைந்த மருந்துகள் காரணமாக நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என அரசாங்க வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

சேனக பிபில மருந்துக் கொள்கை 2008 ஆம் அண்டு வரையப்பட்டது. ஆயினும் அது இன்னும் அமுலாக்கப்படவில்லை. சந்தையில் தரக்குறைவான மருந்துகள் பல உள்ளதால் வைத்தியர்கள் சிபாரிசு செய்யும் மருந்துகள் சில வேளைகளில் தீங்கு விளைவிக்கலாம் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் நளின் ஆரியரட்ன கூறினார்.

இலங்கையில் அமொக்ஸிஸிலின் மருந்தானது 500 இற்கு மேற்பட்ட வர்த்தக பெயர்களில் விற்பனைக்கு உள்ளது. பல்வேறு பெயர்களில் வரும் இந்த மருந்துகளின் தரம், பாதுகாப்புத் தன்மை பற்றி எமக்கு சந்தேகம் உள்ளது என அவர் கூறினார்.

இறக்குமதியாகும் மருந்துகள் உள்நாட்டு மருத்துவ நிபுணர்களால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு மருந்தும் பலவகையான வர்த்தக பெயர்களில் இறக்குமதியாகும்போது நாம் தரங்களை உறுதி செய்வது எப்படிச் சாத்தியமாகும் என ஆரியரத்ன வினவினார்.


வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்யவும் வைத்தியர்களுக்கும் நோயாளர்களுக்கும் பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கவும் மருந்துக்கொள்கையில் கூறப்பட்டுள்ளவாறு குறித்த ஒரு விலையை பேணுவது அவசியமாகும். மருந்துகளின் விலைகள் உயர்வாக இருப்பதனால் நோயாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் சேனக பிபில மருந்துக கொள்கையை உடன் அமுலாக்க வேணடும் என நளின் ஆரியரட்ன கூறினார்.

## முன்னாள் போராளிகள் அணி தெற்கு நோக்கி நல்லெண்ண யாத்திரை

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் குழுவொன்று நேற்றுத் தென்பகுதிக்கான நல்லெண்ண விஜயத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் குழுவில் 500 இளைஞர்கள் பங்குபற்றுவதாகப் புனரவாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.



இந்த விஜயத்தின் முதற்கட்டமாக மஹியங்கனை, தம்பன்னாவைப் பிரதேசங்களுக்கு இக் குழுவினர் செல்லவிருப்பதாக அமைச்சர் கூறினார். இதனையடுத்து கண்டி, கம்பளை, நுவரெலியா ஆகிய பிரதேசங்களுக்கும் இவர்கள் விஜயம் செய்யவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.


அதன் பின்னர் கண்டியில் நடைபெறவுள்ள விளையாட்டு விழாவொன்றிலும் இவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். அடுத்த கட்டமாக கண்டியிலுள்ள இந்து ஆலயத்திலிருந்து சிறிதலதா மாளிகை வரையான சமாதான பேரணி ஒன்றிலும் புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர்கள் ஈடுபடவுள்ளதாக அமைச்சர் மேலும கூறினார்.

## அடையாள அட்டை விநியோகம்

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு வவுனியா நிவாரணக் கிராமங்களிலுள்ளவாக்காளர்களுக்கான விசேட அடையாள அட்டை விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்ட தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு தங்களின் ஆள் அடையாளத்தை உறுதி செய்யும் வகையில் இந்த விசேட அடையாள அட்டைகள் விநியோகிக்கபபடுகின்றன. அத்துடன் நிவாரணக கிராமங்களிலுள்ள வாக்காளர்களுக்கென போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு அரச அதிபரை மேற்கோள்காட்டி அரசாங்கத் தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

## நூலக உதவியாளர் பதவி நீக்கம்; பல்கலை உபவேந்தருக்கு அழைப்பாணை

ரஜரட்டை பல்கலைக்கழக உபவேந்தரை எதிர்வரும் மே மாதம் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அநுராதபுரம் மாவட்ட நீதிபதியும், மேலதிக நீதவானுமாகிய லக்மாலி ஹேவாவசம் நேற்று உத்தரவிட்டார். உபவேந்தர் பேராசிரியர் கே.ஏ.நந்தசேனவிடம் இருந்து 50 இலட்சம் ரூபா இழப்பீடு பெற்றுத்தருமாறு ரஜரட்டை பல்கலைக்கழக நூலக உதவியாளராக கடமையாற்றிய ஒருவர் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்த பின்னரே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். வைபவமொன்றின் போது ஏற்பட்ட தனிப்பட்ட தகராறை அடிப்படையாகக்கொண்டு உபவேந்தர் தன்னிச்சையாக தம்மை சேவையிலிருந்து நீக்கியதாக மனுவில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. தமக்குள்ள அதிகாரத்தையும் மீறி பல்கலைக்கழக உபவேந்தர் செயற்பட்டுள்ளதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.



வடமாகாணத்தில் உலக உணவுத் திட்டத்தின் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த வாரம் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஊழியர் நம்பிக்கை நிதியம் தொழிலாளர்கள் பதிவுசெய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையில் இதுவரை பதிவு செய்யாத தொழில் நிறுவனங்கள் தமது ஊழியர் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஊழியர் சேமலாப நிதியச் சபையின் பிராந்தியப் பொறுப்பதிகாரி ஜே.தமிழழகன் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் பதிவு செய்யாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், ஊழியர் பங்களிப்புத் தொகை கட்டாதவர்கள் உடனடியாகப் பதிவுகளை மேற்கொண்டு பங்களிப்புத் தொகையைக் கட்டுமாறும் தெரிவித்துள்ளார்.

பங்களிப்புத் தொகையினை கட்டத் தவறியவர்களுக்கு கட்டத்தவறிய வருடத்திலிருந்து பங்களிப்புத் தொகையும் அதற்கான தண்டப் பணமும் அறவிடப்படுமெனவும் மேலும் தெரிவித்துள்ளார். (எஸ்)

## இலங்கை - இந்திய கூட்டுப் பாதுகாப்பு வலுவடைகிறது தென்மண்டல இராணுவத் தளபதி கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்திய இராணுவங்கள் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுப்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் வலுவாக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக இந்தியாவின் தென்மண்டல இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ.கே. சிங், நான்கு நாட்கள் விஜயமொன்றை மேற் கொண்டு நாளை இலங்கை வருகிறார்.

இரு நாடுகளினதும் இராணுவ நடவடிக்கைகளைப் பலப்படுத்துவது, இராணுவ ஒத்துழைப்பு போன்றன குறித்துக் கலந்துரையாடுவதே இவரது விஜயத்தின் பிரதான நோக்கமாக இருக்கும் என பி.ரி.ஐ செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

நல்லெண்ண அடிப்படையில் அமையவுள்ள இந்த விஜயத்தின் போது இலங்கையின் முப்படைத் தளபதிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார். இதன்போது இருதரப்பு இராணுவ ரீதியிலான ஒத்துழைப்புத் தொடர்பில் அவர் கலந்துரையாடவுள்ளார்.

இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப்படையினரில் உயிர்நீத்தோருக்காக நிறுவப்பட்டுள்ள ஞாபகார்த்த தூபிக்கும் அவர் மலரஞ்சலி செலுத்தவுள்ளார்.

## கல்வியும் விளையாட்டும் இரு கண்கள் போன்றவை ஒருங்கிணைந்து ஊக்குவிக்க முயற்சி செய்கிறோம்



(கொழும்பு)

மாணவர்களின் கல்வியையும் விளையாட்டையும் ஒருங்கே ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் என ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும் நல்லூர் பிரதேச ஒருங்கிணைபபுக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

குட்டிச் சுட்டி மகிழ் ·நெறிக் கல்வி நிலையத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் கோண்டாவில் இந்து மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த புதன்கிழமை நிலையத்தின் நிர்வாகி உ.வதனராஜ் தலைமையில் நடைபெற்றது. இதன்போது நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உற்சாகமானதும் சிறந்த ஒழுங்கமைப்புடனான கவர்ச்சிகரமான ஒரு விளையாட்டு நிகழ்வாக இவ் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் அமைந்திருந்தன. அதேபோல் இப் பிரதேச மக்களும் கலை கலாசார நிகழ்வுகளை நடாத்துவதில் முதன்மையானவர்களாகக் காணப்படுகின்றனர்.

கல்வி நிலையங்கள் கல்விச் செயற்பாட்டை மட்டுமே முன்னெடுத்து வருகின்ற நிலையில் குட்டிச் சுட்டி கல்வி நிலையம் கல்வியுடன் விளையாட்டினையும் ஒருங்கமைத்து செயற்படுத்தி வருகின்றது.

கடந்த காலங்களில் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானநதா அவர்களும் நாமும் பயங்கரவாதச் சூழலிற்குள்ளும் அச்சுறுத்தலான நிலையிலும் தமிழ் மக்களது சுபீட்சமான வாழ்விற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றினோம்.

முப்பது வருட கால யுத்தத்தினால் எம் மக்கள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியான நிலையில் மாணவர்களின் கல்வியையும், விளையாட்டையும் ஒருங்கிணைத்து ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.

எனவே மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு குடும்ப வறுமையோ கல்வி நிலையோ ஓர் தடையாக அமைந்து விடக் கூடாது என்றும் கல்வியினூடாக மாணவர்களின் ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை எட்ட வேண்டும் எனவும் அவர் மேலும தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஈ.பி.டி.பியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன் அவர்கள் போரினால் அழிவடைந்த எமது தேசத்தை அபிவிருத்தி செய்வதுடன் கல்வி மற்றும் பொருளாதார நிலையிலும் மேம்பட்டு சகோதார மக்களுடன் சரி சமனாக நாமும் வாழ வேண்டும் எனபதற்காகவே கௌரவ அமைசசரும், ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியினரும் செயற்பட்டு வருவதாக தனதுரையில் குறிப்பிட்டார். இளஞ்சிறார்களின் பல்வேறு விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளுடன் சிறப்பு நிகழ்வாக இசையும் அசைவும் இடம் பெற்றது.

## வீதிக்கு எப்போது விமோசனம்

(மல்லாவி)

மாங்குளம் துணுக்காய் சாலை B.269 வீதி பிரதான வீதி மிக மோசமாகப் பாதிப் படைந்திருப்பதாக பயணத்தின்போது வெளிக் கிளம்பும் புழுதியால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மேற்படி மாங்குளம் - துணுக்காய் சாலை வழியாக தூர இடங்களுக்குப் பயணிப்போர் அதிகரித்து வருகின்றனர். இதன் ஒரு பகுதி பெரும் தொகை பாரிய வாகனங்களும் இதனூடாகப் பயணங்களை மேற்கொண்டு வருகின்றன.

இந்த வகையில் கிரவல் மண் புழுதியினால் பயணிக்கும் மக்கள் நனைந்து வருகின்றனர். இதனால் பல சுவாச நோய்களுக்கு உள்ளாகியும் வருகின்றனர். (143)

## வாசகர் வட்ட கலந்துரையாடல்

(மல்லாவி)

மல்லாவி பொது நூலகத்தினுடைய ஆலோசனைக் குழுக் கூட்டமும் வாசகர் வட்டக் கலந்துரையாடல் நிகழ்வும் எதிர் வரும் 14.03.2012 பிற்பகல் 2.30 மணிக்கு மல்லாவி பொது நூதில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் நூலக வளர்ச்சி பற்றியும் வாசகர்களுக்கான சிறந்த நூலக சேவை தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட இருக்கின்றது. மல்லாவி பொது நூலக வாகசர்கள் அங்கத்தவர்கள், ஆலோசனை சபை உறுப்பினர், வாசக வட்ட அஙகத்தவர், பிரதேசத்தில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், வாசிப்பு ஆர்வலர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு மல்லாவிப் பொது நூலகர் வே.லவேந்திரா தெரிவித்தார். (143)

## தண்ணீர்த் தாங்கி கடற்படையினர் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கடற்படையினரால் அந்த ஊரின் கிழக்கு அம்மன் கோவிலின் மேற்கு வீதியில் அமைக்கப்பட்ட தண்ணீர்த்தாங்கி அந்தப் பகுதிக் கிராம மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருக்கிறது.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரால் அமைக்கப்பட்டிருந்த சீமெந்துத் தண்ணீர்த் தாங்கியின் அருகில் இந்த நீர்த்தாங்கி அமைக்கப்பட்டிருக்கிறது.

## அத்துமீறி குடியிருப்போரை வெளியேற்ற சட்ட நடவடிக்கை

(கிளிநொச்சி)

தர்மபுரம் பகுதியில் மருத்துவமனைக்குச் சொந்தமான காணியில் அத்துமீறி குடியிருப்பவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கண்டாவளை காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

குறித்த மருத்துவமனைக் காணியில் 8 குடும்பங்கள் அத்துமீறிக் குடியேறி மருத்துவமனைக்கு கட்டடங்களை கட்டவிடாது தொடர்ந்து குடியிருந்து வருகின்றனர்.

இம்மக்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டும் அவற்றை செவிமடுக்காது அவர்கள் அங்கு வாழ்ந்து வரும் நிலையில் அவர்களை வெளியேற்றும் வகையில் வீடுகளுக்கு ஆதன படிவம் ஒட்டப்பட்டுள்ளது.

இந் நிலையில் படிவம் ஒட்டப்பட்டு 40 நாட்களுக்குள் இடத்தை விட்டு வெளியேறாவிட்டால் இவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (கே)

## தென்னிந்தியப் பேராசிரியைக்கு யாழ்ப்பாணத்தில் வரவேற்பு



(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியாவின் பிரபல பேராசிரியை விஜயலட்சுமி இராமசாமி நேற்று முன்தினம் யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயத்துக்கு விஜயம் செய்தார். இவரின் வருகையை முன்னிட்டு அங்கு விசேட நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

இந்து மன்ற இணைப்பாளர் மதுரகவி காரை எம்.பி அருளானந்தத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

மங்கள விளக்கேற்றலை அடுத்து பிரதம விருந்தினர்கள் பாடசாலை மாணவர்களின் இசை வாத்தியத்துடன் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து வரவேற்புரை, தலைமையுரை என்பன இடம்பெற்றன. பேராசிரியை விஜயலட்சுமி இராமசாமி வடமாகாண பிரதிச் செயலாளர் வி.ரி.செல்வரத்தினத்தினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்து இக்கல்லூரி அதிபர் வே.வேணுகாந்தன், பேராசிரியர் விஜயலட்சுமி இராமசாமிக்கு பொற்கிழி கொடுத்து வாழ்த்துரைத்தார்.


இந்நிகழ்வில் வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சரவணபவானந்தன், பேராசிரியர் இராமசாமி, பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(எஸ்)

## நெல் சந்தைப்படுத்தலில் முல்லை விவசாயிகள் சிரமம்

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கையினை மேற்கொண்டவர்கள் அவற்றை அறுவடை செய்வதிலும், அறுவடை செய்த நெல்களினைப் பதப்படுத்துவதிலும், விநியோகிப்பதிலும் பல்வேறு சிரமங்களினை எதிர்நோக்கி வருகின்றனர்.

இம் மாவட்டத்திலுள்ள முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, விசுவமடு போன்ற பிரதேசங்களில் இம்முறை அமோக விளைச்சல் கிடைத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (42)



**போ**ர் நடந்து கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்படாத இடங்களில் சுற்றி வர இராணுவ காவல் நிலையங்களுக்கு மத்தியில் அந்தக் கடை புதிதாக போடப்பட்டிருந்தது. கூரை

"இந்த மாதிரித்தானே வன்னியில் விடுதலைப்புலிகள் காலத்திலும் மக்கள் வாழ்ந்தார்கள். இது புதிதான விடயம் இல்லைத்தானே?"

என்னை மேலும் கீழும் பார்த்தார். எதாவது பிழையாக சொல்லி விட்டேனோ என்ற பயம் என்னை கவ்விக் கொண்டது. மழைக் குளிரிலும் கழுத்தில் சாடையாக வேர்த்தது. பழைய விடுதலைப்புலி ஒருவரிடம் வீணாக பேச்சைக் கொடுத்து மாட்டிக் கொண்டு விட்டேன். இந்த இரவு

மற்ற எல்லாவற்றிற்கும் வரி விதித்தார்கள் என்று வெளிநாட்டில் இருந்து வன்னிக்குப் போய் வந்தவர்கள் சொன்னார்கள்."

"அப்படிச் செய்ய காரணம் தமிழ் ஈழத்திற்கு அதிகமானவர்கள் தேவை என்பதாலாகும்." எனச் சொல்லி விட்டு சிரித்தார். அந்த சிரிப்பில் கனமான சூழ்நிலையின் இறுக்கம் தளர்ந்தது. உடலுறவைப் பற்றிய விடயம் பேசும் போது மத்திய வயதானவர்களிடம் நட்பு உருவாகிறது.

"ஆமாம். உங்களுக்கு எப்படித் தெரியும்? நான் ஓமந்தையில் இராணுவத்துக்கு மட்டும்தானே எனது பாஸ்போட்டைக் காட்டினேன்?"

"இது பெரிய விடயமல்ல. உங்களிடம் ஒரு வேண்டுகோள். வெளிநாட்டில் உள்ளவர்களை இந்த நாட்டு மக்களின் பேரில் அரசியல் பண்ணாமல் இருக்கச் சொல்லுங்கள். இறந்தவர்களை அங்கீகரித்தால்தான் அவர்கள் ஆன்மா சாந்தியாகும்.

- நடேசன் கட்டுரையிலிருந்து.

# "நானும் தியாகம் செய்து மற்றவர்களையும் தியாகம் செய்ய அழைத்தேன்"

யின் தென்னங்கீற்றுக்கள் புதிதாக இருந்தன. கடைக்கு முன்பாக மரக் குத்திகள் நிறுத்தி மணலும் போட்டு அழகாக லாண்ட்ஸ்கேப் பண்ணப்பட்டு இருந்தது. திறந்திருந்த கடையின் தாழ்வாரத்தின் உள்ளே நீளமான வாங்கில் ஒருவர் படுத்து நித்திரையில் இருந்தார்.

படுத்தவரை தட்டி எழுப்பி பெட்ரோல் தேவை என்று பிளாஸ்டிக் கானைக் காட்டிய போது கண்களை கசக்கியபடி சிறிது தூரத்தில் இருக்கும இதேமாதிரியான கடையைக் காட்டி "அங்கு கிடைக்கும். போங்கோ நானும் உங்களோடு வருகிறேன்" என்றதும் அவரோடு நாதன் அங்கு செல்ல, நான் அந்த அந்த வாங்கில் அமர்ந்து அந்தச் சிறிய கடையை நோட்டம் விட்டேன்.

அதிக அளவு பொருட்கள் இல்லாத போதும் பிஸ்கட் குளிர்பான வகையறாக்கள் என ஒரு கிராமத்து தேநீர்க் கடைக்குரிய தேவையான பொருட்கள் சுத்தமாக அடுக்கப்பட்டிருந்தன.


கடையின் பின்பகுதியால் சாரமணிந்த கட்டையான மனிதர் ஒருவர் உள்ளே வந்தார். வந்தவர் வாங்கின் மறுகரையில் அமர்ந்தபடி சிரித்தார். அவரது சிரிப்பு யாரோ தெரிந்த மனிதரை நினவு படுத்தியது. இந்தக் கடையில் வேலை செய்பவர் என நினைத்து புன்னகைத்தபடி, "எப்படி இருக்கிறீர்கள்" என சம்பிரதாயமாகக் கேட்டேன்.

சிநேகமாக சிரித்த மனிதரிடம் பேச்சுக் கொடுக்க வேண்டும் என்பதால் "போருக்குப் பிறகு இப்ப நிலைமை எப்படி?" என்றேன்

"என்னத்த சொல்லுவது மக்கள் உயிர் வாழ்கிறார்கள். இலவச உணவை தின்பதற்காக மட்டும் வாயைத் திறக்கிறார்கள். இராணுவம் மலம் கழிக்கிற இடத்தில் கூட நிற்கிறது." என சொல்லிய போது மனிதரின் முகத்தில் சோகம் தெரிந்தது.

நேரத்தில் என்ன அரசியல் வேண்டி இருக்கு?. அதுவும் வெளிநாட்டில் இருந்து வந்த நான் வீணாக மற்றவர் மனங்களை நோகப் பண்ணுவதில் என்ன பயன் என சிந்தித்து மவுனமாகினேன்.

அந்த நேரத்தில் மவுனம் சுற்றி இருந்த இருட்டை விட கனமாகத் தெரிந்தது. மெதுவாகத் திரும்பி



அந்த மனிதரின் கண்களைப் பார்த்த போது அந்த கடையின் விளக்கின் வெளிச்சம் அந்த மனிதரின் கண்களில பட்டுத் தெறித்தது. அவை அசாதாரணமான கண்கள். மற்றவர் மனங்களை ஊடுருவிப் பார்க்கும் சக்தி கொண்டவை.

சிறிது நேரத்தில் அவரே மவுனத்தை கலைத்தார்.

"விடுதலைப்புலிகள் காலத்தில் மக்கள் கஷ்டங்களை அனுபவித்தார்கள்தான். அதை ஏற்றுக்கொள்கிறேன். அப்போது விடிவு வரும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. கஷ்டம் தெரியவில்லை. ஆனால் இப்பொழுது எதிர்காலத்தை நினைக்காமல் கஷ்டத்தை அனுபவிக்கிறோம்."

இதற்குப் பதில் சொல்வதா இல்லையா என யோசித்து விட்டு, "இதெல்லாம் மனம் சம்பந்தப்பட்ட விடயம். விடுதலைப்புலிகள் ஆட்சியில் தமிழ்ப்பிரதேசங்களில் பதினைந்து வருடங்கள் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். கட்டாய வரிகள் கட்டாய ஆட்சேர்ப்பு தண்டனைகள் என கொடூரமாக இருந்தது என சிலர் சொன்னார்கள். உடலுறவுக்கு மட்டும் வரி விதிக்காமல

"நீங்கள் விடுதலைப்புலிகளை எதிர்ப்பவரா?"

"நான் விடுதலைப்புலிகளின் போராட்ட வழி முறைகளை மட்டுமல்ல இலங்கையில் பிரிவினையையும் எதிர்ப்பவன்."

"நீங்கள் சிங்களவர்களை நம்புகிறீர்களா?"

"நம்புவது நம்பாதது இங்கே விடயமல்ல. இந்த நாடு பிரிந்து வாழ சர்வதேசம் அனுமதிக்காது. இந்தப் பிரிவினைப் போராட்டம் ஒடுக்கப்படும் போது மக்கள் அநியாயமாக அழிவார்கள் என்பது எனக்குப் புரிந்திருந்தது."

"இது ஏன் மற்றவர்களுக்குப் புரியவில்லை?"

"இதற்கு நான் எப்படி பதில் சொல்லமுடியும்? இது நான் சம்பந்தப்படாத விடயம். எனது அனுமானம் ஒன்று உண்டு. இலங்கைத் தமிழ்ச் சமூகம் தகப்பனுக்கு உண்மை சொல்லப் பயந்து வளர்ந்து பாடசாலையில் ஆசிரியருக்கு, அதன்பின் இராணுவம், இயக்கம் என்று பயத்தினால் உண்மை பேச மறுத்து வளர்ந்ததால் கடைசி வரையும் அப்படியே வாழ்ந்து விட்டது.

வாக்குகளுக்காக அரசியல்வாதிகளும் பொய் பேசினார்கள். அகதி அந்தஸ்துக்காக வெளிநாடு சென்ற தமிழரும் பொய் பேசினார்கள். இந்த நிலையில் மூளை பிசகானவர்கள் மட்டுமே உண்மை பேசுவார்கள். காந்தியை போல் ஒருவர் வந்து சத்திய மேவ ஜய... என்றால் மண்டையில் போட்டுவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்கள்."

"யார் அந்த காந்தி? இயக்கத்து காந்தியையும், ராஜீவ் காந்தியையும் தானே போட்டாகிவிட்டதே."

"நான் சொல்லுவது இந்தியக் காசில் இருக்கிற காந்தியை. சரி நீங்கள் இந்தப் பகுதியில் என்ன செய்கிறீர்கள்?"

"நான் இந்தப் பகுதியை விட்டு எப்படி போக முடியும்?"

"ஏன் அலுத்துக் கொள்கிறீர்கள்?"

"நான் ஒரு இலட்சியத்துக்காக வாழ்ந்தேன். நானும் தியாகம் செய்து மற்றவர்களையும் தியாகம் செய்ய அழைத்தேன்."

அவரது பேச்சு புதிராக இருந்தாலும இரவுப் பொழுதில் இந்த மனிதரின் உணர்வுகளைக் கிளறி மீண்டும் ரணமாக்க மனமில்லாமல் மவுனமாக இருந்தேன். ஆனால் மனிதர் விடாமல் அரசியல் பேசுவதென்று திடமாக இருந்தார்.

"நீங்கள் அவுஸ்திரேலியாவில் இருந்துதானே வருகிறீர்கள்?"



Dr.Nadesan

நாட்டில் ஆயுதப் போர் முடிந்து விட்டது."

"எப்படி நீங்கள் சொல்ல முடியும்?"

"கடைசியில் முள்ளிவாய்க்காலில் போரின் போது நான் பதினைந்தாம் திகதி வரையும் இருந்தேன்."

"அதைச் சொல்லுங்கள்."

"தமிழ்நாட்டையும் வெளி நாட்டுத் தமிழரையும் நம்பிச் செய்த போர். அவர்கள் கைவிட்டதால் முடிவுக்கு வந்தது. எவரையும் நம்பி சரணடையத் தயாராகாதவர்கள் தப்பிப் போக முடியாமல் இரவு இருட்டில் நடந்த சண்டையில் மரணமானார்கள்."

"இதைச் சொன்னால் என்னைத் துரோகி என்பார்கள்"

"நான் சொன்னேன் என்று சொல்லுங்கள் அதாவது பெரிசு சொன்னது என்று சொல்லுங்கள்."

"இந்தக் காலத்தில் வெளிநாட்டவர்களுக்கு பல பெரிசுகள் இருக்கிறார்கள். அமெரிக்காவில் ஒரு பெரிசு தன்னை தலாய்லாமா என சொல்லுது. நோர்வேயில் ஒரு பெரிசு. இந்த நிலையில் அவனவன் இராச்சியம் நடத்துகிறான். உங்களைப் பெரிசு எனச் சொன்னால் யார் நம்புவார். வேலுப்பிள்ளையின் மகனை வைத்து வியாபாரம் செய்ய நினைக்கிறாங்கள்."

"அப்ப வேலுப்பிள்ளை மகனுக்கு சாந்தி செய்து விட்டு அரசியல் நடத்தச் சொல்லுங்கோ" என்று சொல்லிவிட்டு கோபத்துடன் அந்த மனிதர் வெளியேறினார்... போன வேகத்தில் அவரது கால்கள் நிலத்தில் பாவியது தெரியவில்லை.

"யாரோடு பேசிக்கொண்டு இருக்கிறீர்கள்?" என என்னைத் தட்டி எழுப்பிய போது திடுக்கிட்டு கண்ணைத் துடைத்துக் கொண்டேன்.

நாதன் பெட்ரோல் கானுடன் நின்றார்.

"அண்ணைக்கு டீயோ கோப்பியோ" என்றார் கடைக்காரர்.

"கடைக்காரரும் நம்மட ஊர்ப்பக்கம்தான். அடி புங்குடுதீவு. ஆனால் வவுனியாவில் சண்டைக்காலத்தில் இருந்தார்" என்றார் நாதன்.

"கோப்பியைப் போடுங்கள்" எனச் சொல்லிக்கொண்டு கண்களை கசக்கினேன்.

கோப்பிக்காக கொதித்த தண்ணீரில ஆவி வந்து கொண்டு இருந்தது.

## தருமி முதல் தசாவதாரம் வரை

- தமிழ்மகன்



**நா**கேஷ் என்றால் நகைச்சுவை. புத்திசாலித்தனமான பாவனை வெளிப்பாடும் டைமிங் சென்ஸும் உடல் மொழியும் அவருடைய நகைச்சுவைக்குத் தனி ஈர்ப்பைத் தருகின்றன.

திருவிளையாடல், பாமா விஜயம், காதலிக்க நேரமில்லை, ஆயிரத்தில் ஒருவன், சர்வர் சுந்தரம் போன்றவை அவருடைய முதல் ரவுண்ட். உடல் சேட்டைகளும் ஓங்கி ஒலிக்கும் குரலும் பிரதானமாக இருந்தன அதில். அவருடைய இரண்டாவது இன்னிங்ஸ், ஆழ்ந்த அமைதியான உடல் சேட்டைகள் குறைந்த நகைச்சுவை.

நான் அவரை இரண்டாவது இன்னிங்ஸ் காலத்தில்தான் சந்தித்தேன். இரண்டொரு முறை பேட்டி கேட்டபோதும் அதை அவர் தவிர்த்துவிட்டார். பேட்டி தருவதில் பெரிய விருப்பம் எதுவுமில்லை அவருக்கு. மிகவும் விருப்பமுள்ளவர்கள் அல்லது ஏற்கெனவே பழகியவர்களிடத்தில் மட்டும்தான் அவர் பேசினார். அப்படிப் பேசும்போது அங்கே தொடர்ந்து நகைச்சுவைப் பட்டாசு வெடிக்கும்.

கமல்ஹாசனின் மகளிர் மட்டும் படத்தில் அவர் நடிப்பதை கமல்ஹாசன் இப்படி அறிவித்தார்:

"இந்தப் படத்தில் நாகேஷ் நடித்திருக்கிறார்.... உண்மையாகச் சொல்ல வேண்டுமானால் நடித்து 'இருக்கவில்லை' என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் இதில் நாகேஷ் பிணமாக நடித்திருக்கிறார்" என்றார்.

ஒரு படத்தில் ஒரு நடிகர் முழுவதும் பிணமாகவே நடித்து சிரிக்க வைத்தது உலக சினிமா வரலாற்றிலேயே இதுதான் முதல்முறை என்று தோன்றுகிறது.

"அபூர்வ சகோதரர்கள்", "காதலா காதலா", "பஞ்சதந்திரம்", "தசாவதாரம்" என கமல் பல படங்களில் நாகேஷைப் பயன்படுத்தியிருக்கிறார்.

படத்தில் நடிப்பதில் அவருடைய பங்கு முக்கியத்துவமானது என்பது மட்டுமல்ல. படப்பிடிப்பு இடைவேளைகளில் அவர் தரும் பங்களிப்புக்காகவும்தான் அவருக்கு இந்தத் தொடர்ச்சியான வாய்ப்பு என்று நான் நினைக்கிறேன்.

"பஞ்சதந்திரம்" படப்பிடிப்பின்போது நடைபெற்ற சிறு சம்பவம் இது.

கமல்ஹாசன் எப்போதும் அதிக காரம் சாப்பிட மாட்டார். அவர் சாப்பிட்டுக் கொண்டிருந்த சிக்கன் துண்டில் ஒட்டியிருந்த மசாலாவைத் தவிர்க்கும் விதமாக அதன் கழுத்துப் பகுதியைப் பிடித்துக் கொண்டு தட்டில் தட்டினார். மசாலா விழுவதாக இல்லை. வேகமாகப் பலமுறை தட்டினார். அருகில் இருந்த நாகேஷ் லேசாகத் திரும்பிப் பார்த்து "என்னப்பா... கோழி சரியா சாகலையா. இந்த அடி அடிக்கிறே?" என்றார் கூலாக.

கமல் இதையெல்லாம் ரசிப்பார் என்று நாகேஷுக்குத் தெரியும். நாகேஷ் இப்படியெல்லாம் ரசிக்க வைப்பார் என்று கமல்ஹாசனுக்குத் தெரியும்.

## தெரிந்து கொள்வோம்!

- எகிப்து - இதன் தலைநகரான கெய்ரோதான் உலகிலேயே சந்தடி நிறைந்த நகரம் எனப் பெயர் பெற்றுள்ளது.
- சிங்கப்பூர் - பழைய பெயர் டெமாசத் என்பது. டெமாசத் என்றால் கடல் நகரம் என்று பொருள்.
- இந்தியா - உத்தரப்பிரதேச தலைநகர் லக்னோவில் உள்ள சிட்டி மொண்டிசோரி பள்ளி உலகிலேயே மிகப் பெரிய பள்ளிக்கூடமாக கருதப்படுகிறது. இந்தப் பள்ளியின் மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 22,612. இந்தப் பள்ளிக்கூடம் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.
- இலங்கை - தம்புள்ளை மலைக்குகை ஒன்றில் 115 புத்தர் சிலைகள் உள்ளன.
- லாவோஸ் - இந்த நாட்டில் 1955ஆம் ஆண்டு வெளியிட்ட தபால் முத்திரைகளில் ராவணன் மற்றும் அனுமான் படங்கள் உள்ளன.
- அமெரிக்கா - நாசாவின் விண்வெளி கூடத்தில் "மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற குறள் வரி மொழி பெயர்க்கப்பட்டு எழுதி வைக்கப்பட்டுள்ளது.
- ருவாண்டா - தன் நாட்டு தேசியக்கொடியில் "த" என்ற தமிழ் எழுத்தை இடம் பெறச்செய்துள்ளது.
- கனடா - இங்குதான் பண்டி வளைகுடா உள்ளது. இந்த வளைகுடாப் பகுதிக் கடலில் அலை சாதாரணமாக 50 அடி உயரத்திற்கு எழும்பும்.
- கொரியா - இங்குள்ள கலங்கரை விளக்கம் ஒன்று கப்பல் வடிவத்தில் அமைந்துள்ளது.
- ஜப்பான் - இங்குள்ள மயில்கள் இடும் முட்டை சிவப்பாக இருக்கும்.

# அமைதியை வெளியே தேட வேண்டாம்!

- கமயா ஜயதிஸ்ஸ -

இன்று வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளை மீள்கட்டமைப்புச் செய்வதற்காக பிரமாண்டமான முயற்சிகளை மேற்கொண்டுள்ள போதிலும் உளவியல் ரீதியாக நாடு இன்னமும் பிளவுபட்டே உள்ளது. வடக்குக்கும் மற்றும் தெற்குக்கும் இடையே உள்ள முறிவு இன்னமும் அப்படியே உள்ளதுடன் மிகவும் முக்கியமாக சமரசம் என்பது இன்னமும் பின் தங்கியே உள்ளது.

எனவே சமாதானத்தைக் காட்டிலும் இலங்கைவாசி எனும் அடையாளத்தை (மீள்)உருவாக்கம் செய்வதே இதற்கான சிறந்த பரிகாரம்?

போருக்கு பிந்திய கண்ணோட்டத்தில், இலங்கைவாசி என்பதன் கருத்தை எவ்வாறு நாம் வரையறுக்கலாம்? மிகவும் முக்கியமாக, நாம் நம்மை உள்ளடக்கி ஓரின அடையாளமாக நம்மை உருவாக்குவதற்கு ஏற்றதாக எங்கள் வேறுபாடுகளை உள்ளடக்கி, தனிநபர் மற்றும் தேச மக்கள் ஆகிய இரண்டையும் சேர்த்து ஒரு பொதுத் தன்மையை கண்டுபிடிப்பது எப்படி?

ஒரு தனி மனிதனாக அல்லது போருக்கு பிந்திய ஒரு தேசமாக இன்றிலிருந்து சில வருடங்களுக்கு நாம் எதனை எதிர்பார்க்கிறோம்? அநேகமாக ஒரு பொது அடையாளத்தை (அப்படியானது உண்மையில் இருக்குமானால்) நாம் எப்படி உருவாக்குவது?

அதற்கு சிந்தனையிலும் பழக்கத்திலும் ஒரு அடிப்படை மாற்றம் தேவை, அதனை இளைய தலைமுறையினர் தங்கள் சொந்த சித்தாந்தங்களை கூட்டாக கட்டியெழுப்புவதன் மூலமே அடைய முடியும், அவர்களால் தங்கள் சொந்த வேற்றுமைகளை மீறி நாட்டின் நிலையான சமாதானத்தை உருவாக்குவதற்காக ஒரு அடையாளத்தை பகிர்ந்து கொள்ள முடியும்.

இன்று ஆய்வுகள் தெரிவிப்பது: “இந்த நூற்றாண்டில் ,சமய மற்றும் இனம் போன்றவற்றின் சகிப்புத் தன்மையற்ற செய்கைகள் ஏராளமான மக்களுக்கு ஏற்படுத்திய ஏராளமான இடர்களைப்போல, வேறு எந்தக் காரணியும் ஏற்படுத்தவில்லை. இத்தகைய விரிவானதும் நீண்டதுமான இனமோதல் என்கிற வன்முறைக கலவரத்துக்கு வேறு எந்தஒரு தனிக் காரணியும் பொறுப்பாக அமையவில்லை”

போருக்கு பிந்திய இலங்கைவாசி என்கிற ஒரு விடயம உள்ளதென்றால், நாம் தேசிய இனம் என்கிற கருத்திலா இதை பேசிக் கொண்டிருக்கிறோம், அந்த விடயத்தில் இலங்கைவாசி என்பதன் கருத்து இலங்கை தேசத்துக்கு சொந்தமானவர் என்பதா? ஆனால் திரும்பவும் இலங்கையை ஒரே தேசம் என்று நம்மால் கருத முடியுமா அல்லது அப்படியில்லையா, இந்த தேசம் தீவுக்கு உள்ளேயும் மற்றும் வெளியேயும் துண்டு துண்டாக சிதறிக் கிடக்கிறதா?

“குறுகிய குழுவாத சித்தாந்தங்களை பிணைத்துக் கொண்டிருக்கும் ஒரு நாட்டைக் காட்டிலும் தனி நபர் மற்றும் குழுக்களின் பல்வகை அடையாளங்களை அங்கீகரிக்கும் ஒரு நாட்டில் சமாதானம், உறுதிப்பாடு, அபிவிருத்தி என்பன வலுவடைவதற்கான சாத்தியங்கள் அதிகம்”

அடையாளம் என்கிற பதத்துக்கு அரசாங்கத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. கடந்த பல வருடங்களாக இலங்கை போராடுகிறதே தவிர அதன் வேற்றுமைகளை ஒரு பானையில் போட்டு உருக்கும் முயற்சியில் திருப்திகரமான வெற்றியை பெறவில்லை, எப்படியாயினும் அந்தப் பானை சுலபத்தில் நொருங்கக் கூடியது என நிரூபித்துள்ளது. ஆகவே எப்படி ஒரு நாடு அதன் சொந்த அடையாளம் துண்டு துண்டாக உடைவதிலிருந்து மீள்வது?

அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் பொது கொள்கைகள் சமாதானத்தை உருவாக்கும் முயற்சியின் ஒரு



பகுதியாக ஒரு புது அடையாளத்தை செதுக்குவது அவசியம். அதன் நடவடிக்கை சமூக பொருளாதார அபிவிருத்திகளின் வேகவளர்ச்சியாகவும் மற்றும் சர்வதேச அங்கீகாரத்தை பெறுவதுடன் மட்டும் நின்றுவிடாமல் அது அதன் பிரஜைகளிடத்தில் இறுதியாக அவர்களின் இலங்கைவாசி என்கிற தன்மையை உறுதிப்படுத்தும் விதமாக பாரிய உளவியல் தாக்கத்தையும் ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

அதற்கு கல்வித்துறையில் ஒரு சீர்திருத்தத்தை ஆரம்பிப்பதில் தொடங்கி சகல இன மற்றும் மதக் குழுக்களிடையே சமூகப் பங்களிப்பினை முன்னேற்ற வேண்டியது அவசியம். சகல சமூகங்களிலும் வரம்புக்கு உட்படுத்தப் படுவதற்கு பிரதான காரணம் சமத்துவமின்மையே, அதன் முதல் அனுபவம் ஆரம்பிப்பது பாடசாலைகளிலேயே.

ஒரு சமயத்துக்கு மற்ற சமயத்தை விட முன்னுரிமையோ சலுகையோ வழங்குவதற்கு அரசாங்கப் பாடசாலைகளை ஒரு மேடையாக பயன்படுத்தக் கூடாது. மாறாக மனிதத்தின் மதிப்புகளையும் மற்றும் நெறிமுறை சார் கொள்கைகளையும் ஆரம்ப பாடசாலைகளிலிருந்தே போதிப்பதற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

பல்லின அரசாங்க கொள்கைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் நமது வேறுபாடுகளை உடைத்தெறிய வேண்டியதே நமது தேவையாக உள்ளது. உதாரணத்துக்கு ஒரு தொழில் பெறுவதற்கோ, அல்லது நமது நாளாந்த வாழ்க்கையிலோ, மொழி ஒரு தடையாக இருக்க கூடாது. நாம் விசேடமாக நமது சொந்த நாட்டில் நமது சொந்த மக்களுடன் கூட தொடர்பு கொள்ள முடியாவிட்டால் பிறகு நாம் எப்படி சமூக சமத்துவம் பற்றிக்கூட கலந்துரையாட முடியும்?

இலங்கைவாசிகள் ஆகிய நாங்கள் மதங்களின் நடைமுறைக்கு அளவுக்கதிகமான முக்கியத்தை வழங்கியுள்ளோமே தவிர ஆன்மீகத்துக்கு போதியளவு முக்கியத்துவம் வழங்கவில்லை, இதைத்தான் புத்தரும் எங்களுக்கு கற்பிக்க முயன்றார், “அமைதி உள்ளிருந்தே வருகிறது. இல்லாமல் அதை தேட முயலவேண்டாம்” என்று.

பாரபட்சம் காரணமான விரக்தி அல்லது பெரும்பாலும் சிறுபான்மையினரை தவிர்ப்பதனால் ஏற்படும் நிராகரிப்பு, அவர்கள் வாழுமிடத்திலுள்ள பெரும்பான்மை சமூகத்திலிருந்து அவர்களை மேலும் வெகுதூரம் தள்ளிச் சென்று விடுகிறது. இத்தகைய வரம்புக்கு உட்படுத்தும் செயல் அநேகமாக புதியதும் ஓரளவு பகுத்தறிவற்றதுமான அடையாளத்தை கண்டறிவதற்கான அவசியத்தை உருவாக்கி விடுகிறது.

எனவே சிறந்த இலங்கையை கட்டியெழுப்புவதில் சிறுபான்மையினர் அதேபோல புலம்பெயர்ந்தவர்கள் அனைவரையும் உட்படுத்துவது மிகவும் அவசியம்.

எங்களது பன்முகத்தன்மையை சிலர் எங்களது பலவீனம் என்று கருதலாம், ஆனால் அதை எங்களது பலமாகவே நான் காண்கிறேன். எவ்வளவு பன்முகத்தன்மை உள்ளதோ அவ்வளவுக்கு நாங்கள் சிறப்பான புரிந்துணர்வும் முழுமையும் கொண்டவர்களாக இருப்போம். நாங்கள் எப்படி வாழ்கிறோம் அல்லது எப்படி ஒருவருக்கொருவர் கூடி வாழ்கிறோம் என்பதல்ல பிரச்சினை. ஆனால் இந்த பல்வகை அடையாளங்களையும் எப்படி ஒரு பொது அடையாளமாக இணைக்கிறோம் என்பதுதான் முக்கியம்.

இறுதியாக நாங்கள் இருபகுதியினரும் தனிநபர்களாக அதேபோல குழுக்களாக இலங்கைவாசி என்கிற அடையாளத்தை கருத விரும்புகிறோம் என்பதிலும், மற்றும் அதைக் கொண்டு என்ன செய்யப் போகிறோம் என்பதில்தான் எல்லாமே தங்கியுள்ளது.

இலங்கைவாசியாக இருப்பது இனம், சமூகம், சமயம், மற்றும் புவியியல் போன்ற வேறுபாடுகளுக்கு எந்தவித முக்கியத்துவத்தையும் தராது என்றே நான் நம்புகிறேன். இலங்கைவாசியாக இருப்பது நாம் எங்கிருந்து வந்தோம எங்கே போகிறோம் என்பதை கருத்தில் கொள்ளாமல் சகிப்புத்தன்மையும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும தன்மையுடனும் இருப்பதே. பரஸ்பர சகிப்புத் தன்மையுள்ள ஒரு கலாசாரத்தையும் இலங்கைவாசி என்கிற பொதுவான அடையாளத்தை உருவாக்கி அதை பேணிப்பாதுகாப்பது நமது பொதுவான பணி.

நாளைய இலங்கைவாசியாகிய அவன் அல்லது அவள் தனது அடையாளத்தை, மரியாதை, புரிந்துணர்வு மற்றும் சகிப்புத்தன்மையுள்ள அவனது அல்லது அவளது பன்முகத்தன்மை என்பனவற்றின் மூலமாக கட்டியெழுப்புவர்.

**நான் ஒரு இலங்கைவாசி. நீங்கள்?**

# எழுதும் கலை -5

**1.** என்னைப் பெரிதும் பாதிப்பவை மனித வாழ்வின் பிரச்சினைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்குப் பகைப்புலனாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சினைகளே. சமுதாயத்தின் தனிப்பட்ட முறையில் தீவிர சுயஉணர்வு இல்லை என்பேன். ஆனால் எழுத்தாளனுக்கு இது இன்றியமையாதது. அவனுடைய படைப்புகளில் சமுதாய நோக்கமே முதலிடம் பெறவேண்டும். உருவம், உத்தி முதலிய நுணுக்கங்கள் உள்ளடகத்தைப் பொறுத்தே அமைகின்றன. சமுதாயத்தின் வாழ்க்கைமுறையினால், ஏற்றத்தாழ்வுகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி எழுதுவது அவசியம் என்பேன்.

**2.** சும்மாவானும் “கிளி ‘கீகீ’ என்று கத்தியது, நதி சலலத்து ஓடிக்கொண்டிருந்தது, காற்று மந்தஹாசமாக வீசிக் கொண்டிருந்தது” என்று எழுதிக கதைபண்ணிக் கொண்டிருப்பதைவிட, எங்கெங்கே இதயங்கள் எப்படி எப்படியெல்லாம் பற்றிக் கொண்டு எரிகிறது என்று எடுத்துக் காட்டி, நமது சமூகத்தின் பெரிய பீடங்களை அச்சுறுத்தி எச்சரிக்கவேண்டுவது இக்கால இலக்கியத்தின் தவிர்க்க வொண்ணாத கடமையாகும்.

**3.** வாழ்க்கை என்பது காதல் மட்டுமே அல்ல, ஏனென்றால் இங்கு நம்மில் பலர் வாழவே இல்லை. காதலென்பது நமது இளைஞர்களைப் பொறுத்தவரை வெறும் மனப் பிரமைதான். சமூகத்தில் “வாழாதவர்களி”ன் வாழ்வுக்கு இலக்கியத்தில்கூட இடமே இல்லை. காதலித்தவர்களைப் பற்றியே எழுதிக் கொண்டிருந்தால் காதலிக்க முடியாதவனைப் பற்றி யார் எழுதுவது? பூர்ண சந்திரனைப் பற்றியே எழுதிக் கொண்டிருந்தால் அமாவாசை இருளில் அக்கம்பக்கத்தாருக்குத் தெரியாமல் சோரம்போகும் கைம் பெண்களைப் பற்றி யார் எழுதுவது?

**4.** கவிமனம் கொண்டவனுக்கு வாழ்க்கையின் ஒவ்வோர் அசைவிலும் கவிதை தென்படும். அதுபோலவே, நீண்ட நெடிய இவ்வாழ்க்கைக் காதை, சிறுகதை மனம் கொண்டவனுக்கு கதைகதைகளாய்ப் பூத்துச் சொரியும். காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்.

**5.** ஓர் ஒலி, ஒரு சொல், யாரோ யாரிடமோ எதற்கோ சொன்ன அசரீரி போன்றதொரு வாக்கு, வேகமாய்ப் போகிற ஒரு வாகனத்தில் பிரயாணம் செய்து கொண்டிருக்கிற போது, ஒரு நொடியில் கண்ணில் பட்டு மறைந்த காட்சி இவையாவும் ஒரு கவியின் உள்ளத்தில் பட்டுப் பிரதிபலிப்பதால் ஏற்படும் ஒரு வடிவமே நவீனகாலச் சிறுகதை ஆயிற்று, ஆகிவிடமுடியும்.

**6.** ஒரு நல்ல நோக்கமில்லாமல் எந்த நல்ல கலை வடிவமும் வர முடியாது. சிறுகதை எழுதவேண்டும் என்ற ஆசையினால் எழுதப்படுவது சிறுகதை ஆகாது. வடிவ அமைப்பில் அது சிறுகதை என்று என்னதான் எழுதுபவனாலும், பத்திரிகைக்காரனாலும் நிறுவப்படினும், அது திரும்பவும் படிக்கத்தக்க சிறப்புடைய சிறுகதை ஆகாது. ஏன்? அதில் ஒரு நன்னோக்கமில்லை. அதன் நோக்கமே அது



அதுவாக இருப்பது என்று அமைந்துவிட்டால், அது செயல் திறனற்ற சிறுகதையின் சிதைந்த வடிவமாகவே எஞ்சி நிற்கும்.

**7.** “காட்டும் வையப் பொருள்களில் உண்மை கண்டு” சேர்க்கும் சாத்திரம் சிறுகதை ஆகும். இதில் கற்பனைக்கு இடமே இல்லை. வாழ்க்கை காட்டுவதைக் கொண்டு நாம் காட்ட விரும்புவதை அதன் முலமே உணர்த்துகின்ற ஒரு முயற்சியே என் அனுபவத்தில் சிறுகதைக்கு ஆதாரம் ஆகும்.

**8.** சிறுகதைக்கு அடிப்படையும், கருவும், வித்தும் ஒரு கருத்தே அகும். அந்தக் கருத்து எழுதுபவனின் மனத்தில் எவ்வளவு ஆழமாக கூர்மையாகப் பதிந்து, பாதித்து அவனை அலைக்கழிக்கிறதோ அந்த அளவு அந்தச் சிறுகதையும் ஆழமானதாய், கூர்மையாய்ப் படிப்பவர் நெஞ்சத்தில் - எப்படி எழுதுபவனின் நெஞ்சத்தில் எழுந்து அலைக்கழித்ததோ, அதனினும் ஆயிரம் மடங்கு அதிகமான அலைகளையும். பாதிப்புகளையும் - ஏற்படுத்தி அந்த மூலக் கருத்தை முழுமையாகப் பதிய வைத்து விடும்.

**9.** ஒரு சிறுகதை சிறந்ததாயின் அதைப் படித்தவர் வாழ்நாள் முழுதும் அந்தச் சிறுகதையை மறத்தல் ஏலாது. எழுதியவனின் பெயர்கூட மறந்து விடும் கதையில் வரும் பாத்திரங்கள் பெயர்கூட நினைவில் நிற்காமல் போய்விடும். ஆனால், அது சொல்ல வந்த கருத்தை இலக்கிய வாசகரின் இதயத்திலும் இலக்கியத்தின் சரித்திரத்திலும் நிரந்தரமாய்ப் பதித்துவிடும்.


**10.** சிறந்த சிறுகதைகளையும் இலக்கியங்களையும் பயில்வதன் நோக்கம் தாமும் அது மாதிரிச் சிறுகதைகளை எழுத வேண்டும் என்பதாக அமைந்து விடலாகாது. அந்தச் சிறந்த சிறுகதையாசிரியர்களின் நோக்கமும் அதுவல்ல. அக்கதைகளைப் பயில்வதன் மூலம் வாசகர்களின் - அதாவது மக்களின் - அறிவும் மனமும் உயர்ந்து சிறக்கவேண்டும் என்பதே ஆகும்.

**11.** சிறுகதை என்பது சிறிய, குறுகிய சின்ன உள்ளங்களிலிருந்து உருவாக முடியாது. கதை எழுதுவதற்கு அறிவும், அனுபவமும், மனிதர்கள்பால் அன்பும் எந்த ஒரு மகா ஞானிக்கும் இணையாக எந்த ஒரு சாதாரண மனிதனுக்கு அமைந்து விடுகிறதோ அவன் ஒரு நல்ல சிறுகதையை எழுதிவிட முடியும்.

**12.** “பொழுது போக்குக்காக இலக்கியம்” என்கிற வாதம் மிகவும் பொல்லாதது. பொழுது போக்குக்காக, காதல் என்ற பெயரில் ஆண்-பெண் உறவு, உறவு கொள்ளுகிற போக்கு எப்படி ஒருவனை அல்லது ஒருத்தியை ஒழுக்க வீழ்ச்சியில் கொண்டுபோய் விடுமோ அதே போன்ற வீழ்ச்சியில் இந்தப் “பொழுது போக்குக்காக இலக்கியம்” என்கிற வாதம், கொண்டுபோய் விட்டுவிடும்.

- ஜெயகாந்தன்

# சிங்கப்பூர் கப்பலை முடக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு



(சென்னை)

கேரளக் கடல் பகுதியில் மீன்பிடி விசைப் படகு மீது மோதிய சிங்கப்பூர் கப்பலை முடக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த மார்ச் 1 ஆம் திகதி இரவு பெரிய சரக்குக் கப்பல் ஒன்று மீன்பிடித்துக் கொண்டிருந்த படகு மீது மோதியதில் மீன்பிடி படகு சேதமடைந்து கடலில் மூழ்கியது. படகில் இருந்தவர்களில் 4 பேர் உயிரிழந்தனர். மேலும் ஒருவரைக் காணவில்லை.

இந்நிலையில், மீன்பிடி படகு மீது மோதிவிட்டு சென்ற சரக்குக் கப்பலை கண்டுபிடிக்கும் பணியில கடலோர காவல் படையினர் தீவிரமாக ஈடுபட்டனர். பின்னர் அந்தக் கப்பல் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த எம்.வி. பிரபு தயா என்பது கண்டறியப்பட்டது.

இலங்கை கடல் எல்லையில் சென்று கொண்டிருந்த அந்தக் கப்பலை சென்னை துறைமுகத்துக்குத் திருப்புமாறு கப்பலில் இருந்தவர்களுக்கு இந்தியக் கடலோர காவல் படை சார்பில் தெரிவிக்கப்பட்டது.


அதனைத் தொடர்ந்து அந்தக் கப்பல் இப்போது சென்னை துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே மீன்பிடி படகின் உரிமையாளரான கொல்லத்தைச் சேர்ந்த ஜேக்கப் அந்தோனி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

எனது படகு மற்றும் ஏராளமான மீன்பிடி சாதனங்கள் கடலில் மூழ்கி விட்டன. எனக்கு ஏற்பட்டுள்ள இந்த நஷ்டத்தை ஈடு செய்யும் விதத்தில் பிரபு தயா கப்பல் நிறுவனம் எனக்கு ரூபா 1 கோடி நஷ்ட ஈடு தர நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.

அதுவரை அந்தக் கப்பலை சென்னை துறைமுகத்திலேயே முடக்கி வைக்க வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனு நீதிபதி கே.பி.கே. வாசுகி முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது, அடுத்த உத்தரவு வரும் வரை பிரபு தயா கப்பலை இங்கேயே முடக்கி வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.




# "அயன்" தமிழ்ப்படப் பாணியில் போதை மருந்து கடத்தல்

(புதுடில்லி)


இந்தியாவிலிருந்து இந்தோனேசியா மற்றும் அவுஸ்ரேலியாவிற்கு போதை மருந்து கடத்த முயன்ற ஒரு அவுஸ்ரேலியரை பாலி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவுஸ்ரேலியாவில் உள்ள மெல்பெர்னை சேர்ந்த எட்வர்டு மியாட், கடந்த மாதம் சுற்றுலா பயணியாக இந்தியா வந்துள்ளார்.

தலைநகர் புதுடில்லியியில் சில நாட்கள் தங்கி இருந்த இவர், 1.1 கிலோ போதை மருந்துகளை, டில்லி போதை மருந்து கும்பலிடம் வாங்கி, 72 கேப்சூல்களில் அடைத்து விழுங்கி உள்ளார்.

பின்னர் இந்தோனேசியாவில் உள்ள பாலி தீவுக்கு சென்றுள்ளார்.

அப்போது பாலி விமான நிலையத்தில், அவரது நடத்தையில் சந்தேகம் அடைந்த அதிகாரிகள் அவரைப் பரிசோதனை செய்தனர். அவரது உடலை எக்ஸ்ரே எடுத்து பார்த்த போது வயிற்றுக்குள் 72 கேப்சூல்களில் போதை மருந்து




இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அவரைக் கைது செய்த பாலி பொலிஸார் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி, அவர் விழுங்கிய மாத்திரைகளை வெளிக் கொண்டுவந்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில் இந்தப் போதை மருந்து புதுடில்லியில் வாங்கியவர் என்றும் இதற்கு முன்பு பல முறை இந்தியா மற்றும் பாலி வந்து சென்றதும் தெரிய வந்துள்ளது.

எனவே இவர் இந்தியாவில் இருந்து இந்தோனேசியா மற்றும் அவுஸ்ரேலியாவிற்கு போதை மருந்து கடத்தும் கும்பலுடன் தொடர்பு இருக்கக்கூடும் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# அரிய வகைப் புறாக்கள் வனப்பூங்காவில் மாயம்



குஜராத் மாநிலம் வதோதராவில் உள்ள சாயாஜி கார்டன் உயிரியல் பூங்காவிலிருந்து அரிய வகையை சேர்ந்த 24 புறாக்கள் மாயமான சம்பவம் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, வழக்குப் பதிவு செய்துள்ள குஜராத் பொலிஸார், சம்பவம் குறித்து உயிரியல் பூங்கா அதிகாரிகளிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில், மர்ம நபர்கள் இருவர், புறாக்கூண்டுகளை திறந்ததை தாங்கள் கண்டதாகவும், அவர்களைப் பிடிக்க முயல்வதிற்குள், அவர்கள் தப்பியோடி விட்டதாக பூங்கா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியத் துறைமுகங்களை நவீனப்படுத்த முதலீடு



(புதுடில்லி)

இந்தியாவில் உள்ள அனைத்து துறைமுகங்களையும் தனியார், பொதுத்துறைப் பங்களிப்புடன் நவீனப்படுத்தப்படவுள்ளதாக மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நடந்த நிகழ்ச்சியில் மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜி.கே. வாசன் கூறியதாவது,

துறைமுக மேம்பாட்டிற்காக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தியாவில் உள்ள அனைத்து முக்கிய கடல்துறை முகங்களை மேம்படுத்துவதற்கும், சர்வதேச தரத்தில் நவீனப் படுத்துவதற்கும் ரூபா 2.34 இலட்சம் கோடி முதலீடு செய்யப்பட உள்ளது.

இவ்வளவு நிதி மத்திய அரசிடம் கிடையாது. எனினும் தனியார், பொதுத்துறைப் பங்களிப்புடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

கடந்த ஆண்டு துறைமுகங்கள் வாயிலாக 936 மில்லியன் தொன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளது. வரும் 2019 - 2020 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவில் உள்ள அனைத்து துறைமுகங்களிலும் 3,230 மில்லியன் தொன் சரக்குகளைக் கையாள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தியச் செய்திகள்

## பழித்துரைக்கும் இழி குணத்தை நிறுத்துவோம்

"பழித்துரைக்கும் இழி குணத்தை விரைந்து நிறுத்துவோம்" எனச் சிந்திக்க அழைக்கப்படுகின்றீர்கள்.

புறங்கூறாமை:

ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப்பற்றிப் பழித்துச் சொல்லாமை. கோள், குண்டனி அதிகாரியிடம் சொல்லுதல் அவரைப்பற்றித் தீதாகப் பேசுதல்.

விறகு இல்லாவிடில் நெருப்பு அணையும் புறங்கூறுபவர் இல்லாவிடில் சண்டை அடங்கும். (நீதி.மொ. 26: 20)

பிறர் குற்றங்களைக் கிண்டிக் கிளறித் தூற்றுபவர் கயவர் எரிக்கும் நெருப்புப் போன்றது அவரது நாக்கு. (நீதி.மொ.16: 27)

கோணல் புத்திக்காரர் சண்டையை மூட்டிவிடுவர் புறங்கூறுவோர் நண்பரைப் பிரித்துவிடுவர். (நீதி.மொ. 16: 28)

தீங்கு விளைவிக்கும் பேச்சைத் தீயவன் விருப்பத்தோடு கேட்பான். அவதூறான கூற்றினைப் பொய்யன் ஆவலோடு கேட்பான். ஏழையை ஏளனம் செய்கிறவர் அவரை உண்டாக்கினவரையே இகழுகிறார். (நீதி.மொ. 17: 4,5)

ஒருவர் இல்லாவிடத்திலும் சரி இருக்கும்போதேனும் சரி மற்றவரைப்பற்றி புறுங்கூறிய சந்தர்ப்பங்களுக்காக மனம் வருந்தி திருப்பலியில் பங்குபற்றி மனம் மாறியவர்களாக மாற முயன்றிடுவோம்....

அருட்தந்தை மா.றேஜிஸ் இராசநாயகம்

# ஒரு இலட்சம் பெண்களுக்கு வருடாந்தம் மார்பக புற்றுநோய்

(புதுடில்லி)

இந்தியாவில் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் பெண்கள் மார்பக புற்றுநோய் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர் என்ற அதிர்ச்சி தகவல் சென்னையில் நடந்த கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

அப்பல்லோ மருத்துவமனை புற்றுநோய் மையம் சார்பில் உலக பெண்கள் தினத்தையொட்டி சென்னையில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கிற்கு மருத்துவமனை நிர்வாக இயக்குநர் பிரிதா ரெட்டி தலைமை தாங்கினார்.

நடிகை கௌதமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, "மார்பகப் புற்றுநோய் தடுப்பு" முறைகள் என்ற புத்தகத்தை வெளியிட்டு பேசினார். அப்போது அவர், நோய் வரும் வரை நாம் யாரும் உடலை கண்டுகொள்வதில்லை. வந்த பிறகு தான் உடலை கவனிக்க தொடங்குகிறோம். நோய் வரும் முன்னே காப்பது தான் புத்தி சாலிதனம். சரியான உணவு, நல்ல உடற்பயிற்சி உடலுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும் என்றார்.

மார்பக புற்றுநோய் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் செல்வி பேசியதாவது,

இந்தியாவில் சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சம் பெண்கள் மார்பக புற்றுநோய்க்கு ஆளாகிறார்கள். இதற்கு காரணம் பெண்களிடையே சரியான விழிப்புணர்வு இல்லாதது தான். பயம், அறியாமை மற்றும் சரியான சிகிச்சை எடுத்துக்கொள்ளாதது போன்ற காரணங்களால் பல பெண்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

மீன், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை உணவில் சேர்த்துக்கொள்வதும், காரம் மிகுந்த உணவுகள், கொழுப்பு நிறைந்த உணவுகளையும் தவிர்க்க வேண்டும்.

வயதுக்கு வந்தது முதல் பெண்கள் தினநதோறும் தங்களது மார்பகங்களை சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். மார்பகங்களில் ஏதாவது வித்தியாசம் தெரிந்தால் அது பற்றி மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது நல்லது. வெட்கப்பட்டு கொண்டோ, பயந்து கொண்டோ மறைப்பது நல்லதல்ல. பெண்களுக்கு தற்போது பயம் இல்லாத விழிப்புணர்வு தான் தேவை. இவ்வாறு அவர் பேசினார்.

# ஒசாமாவின் மனைவிகளை விடுவிக்காவிட்டால் பயங்கர விளைவுகள் ஏற்படும் - தலிபான்




ஒசாமா பின்லேடனின் மூன்று மனைவிகளை உடனடியாக விடுவிக்காவிட்டால் பாகிஸ்தான் இராணுவம், பொலிஸ் நீதித்துறை அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என தலிபான்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடனின் மூன்று மனைவிகள் பாகிஸ்தானில் சட்ட விரோதமாக நுழைந்ததாக கூறி, அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு சமீபத்தில் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் பின்லேடனின் மனைவிகளை உடனடியாக விடுவிக்காவிட்டால், இந்த வழக்கில் தொடர்புடைய நீதிபதிகள், வழக்கறிஞர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் நாடு முழுவதும் உள்ள அரசு அலுவலகங்கள் மீது தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்துவோம் என பாகிஸ்தானைச் சேர்ந்த தெரீக் இ தலிபான் என்ற தீவிர வாத அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.




# சூரியப்புயலால் பாதிப்பில்லை



சூரியப் புயலின் தாக்குதல்கள் மீண்டும் தொடரும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். கடந்த வியாழனன்று தாக்கிய சூரியப்புயலால் பூமிக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை.

மிகப்பெரிய சூரிய புயல் ஒன்று பூமியைத் தாக்கியது. இது கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகப் பெரியது. வழக்கமான சூரிய புயலில் இருந்து இது 10 மடங்கு பெரியது என்று நாசா விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர்.

சூரியனில் ஏற்படும் வேதியியல் மாற்றங்கள் காரணமாகவே காந்தப் புயல்கள் ஏற்படுகின்றன.

சூரியனின் மேற்பகுதியில் கொந்தளிப்பாக காணப்படும் பகுதி, சில நேரங்களில் அதிக வெப்பத்தால் அதில் இருந்து பிய்த்துக் கொண்டு காந்தப் புயலாக வெளியேறும். இது பல இலட்சம் மைல் வேகத்தில் பூமியை நோக்கிப் பாயும்.

இதனால் செயற்கைக் கோள், மின்சாரம், விமானப் போக்குவரத்து பாதிக்கப்படலாம். இதனைப் போன்று அவ்வப்போது நடந்தாலும் இதுவரை பூமிக்கு எந்த ஆபத்தும் நிகழவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கு கொடுமைகள் பாகிஸ்தானில் மீண்டும் அதிகரிப்பு



பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் பெண்களுக்குப் பல்வேறு விதமான கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

அவ்வாறு கட்டுப்பாடுகளை மீறும் பட்சத்தில் தலிபான்களின் தாக்குதலுக்கு ஆளாகுகின்றனர்.


பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஸ்வாபியில் கல்லூரியில் தலிபான் தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் பெண்கள் கல்லூரி தரை மட்டமாக்கப்பட்டது, அதிர்ஷ்டவசமாக எவ்வித உயிர் இழப்பும் ஏற்படவில்லை என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் தீவிரவாதிகள் கல்லூரி கட்டடத்துக்கு வெளியே வெடிகுண்டை வைத்து வெடிக்கச் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# டைட்டானிக் கப்பல் விபத்திற்கு கப்டனின் குடிபோதையே காரணம்

## - உண்மைக்கடிதம் ஏலத்திற்கு வருகிறது



டைட்டானிக் கப்பலின் கப்டன் குடித்துவிட்டு ஓட்டியதால் தான், கப்பல் பனிப்பாறையில் மோதி விபத்துக்குள்ளானதாக கப்பல் விபத் தில் இருந்து உயிர் தப்பிய எமிலிஎன்ற பெண் கூறியுள்ளார்.

மிகப் பெரிய ஆடம்பர சொகுசுக் கப்பலான டைட்டானிக் கடந்த 1912ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி பனிப்பாறையில் மோதி கடலில் மூழ்கியது.

அதில் பயணம் செய்த 2228 பேரில் 1,522 பேர் பலியாயினர். டைட்டானிக் விபத்தில் 2 மகன்களுடன் உயிர் தப்பிய எமிலி ரிச்சர்டு என்ற பெண் தனது உறவினருக்கு எழுதிய கடிதம் ஏலத்துக்கு வருகிறது. அந்த கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது, டைட்டானிக் கப்பல் இரவு 11 மணியளவில்தான் பனிப்பாறையில் மோதி உடைந்தது.

கப்பலின் கப்டன் எட்வர்டு சுமித் குடித்துவிட்டு அலட்சியமாக கப்பலை ஓட்டியதால் தான் இந்தப்பயங்கர விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்படுவதற்கு முன் முதல் வகுப்பு விடுதியில் நடந்த விருந்தில் பங்கேற்ற எட்வர்டு மது அருந்தினார். பின்னர் குடிபோதையில்தான் கப்பலை ஓட்டினார் என்று குறிப்பிட்டுள்ளார் எமிலி. இக்கடிதம் ரூபா15.6 இலட்சம் வரை ஏலம் போகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கப்டன் குடித்திருந்ததால்தான் டைட்டானிக் கப்பல் மூழ்கியதாக வேறு எந்த தகவலும் கிடைக்கவில்லை என்று டேவிசஸ் ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.



# 75 நாட்கள் தலைகீழாகத் தொங்கி இரட்டைக் குழந்தை பெற்ற கர்ப்பிணி

போலந்து நாட்டைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் பெரிய சாதனையை நிகழ்த்தி தனது இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

போலந்து நாட்டைச் சேர்ந்தவர் ஜோவன்னா. கர்ப்பமாக இருந்த அவரது வயிற்றில் 3 குழந்தைகள் இருந்தது தெரியவந்தது. இந்த நிலையில் 5 மாத கர்ப்பமாக இருந்த நிலையில், அவருக்கு திடீரென பிரசவ வலி ஏற்பட்டது. இதையடுத்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அப்போது ஒரு குழந்தை இறந்தே பிறந்தது. ஆனால் வயிற்றில் உள்ள மற்ற 2 குழந்தைகளையும் காப்பாற்ற முடிவெடுத்த மருத்துவர்கள், அதற்காக சில அசாதாரணமான யோசனைகளை தெரிவித்தனர்.

அதை ஏற்றார் ஜோவன்னா. அதன்படி அவர் தலைகீழாக வைக்கப்பட்டார். இதற்காக படுக்கையையும் அதற்கேற்ப மாற்றியமைத்தனர்.

வயிற்றில் இருக்கும் குழந்தைகள் தொடர்ந்து உயிருடன் இருக்க வேண்டும் என்றால் ஜோவன்னா 24 மணி நேரமும் தலைகீழாக இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

அவரும் ஒப்புக்கொண்டு தலைகீழாகவே 75 நாட்களைக்கழித்தார்.அதன் பிறகு பிரசவம் நடந்து 2 குழந்தைகளை மருத்துவர்கள் பத்திரமாக வெளியே எடுத்தனர். அதில் ஒன்று ஆண், இன்னொன்று பெண் குழந்தையாகும்.

ஆண் குழந்தைக்கு இக்னேசி என்றும், பெண் குழந்தைக்கு இகா என்றும் பெயர் சூட்டியுள்ளார் ஜோவன்னா. தற்போது இரு குழந்தைகளையும் சிறப்பு இன்குபேட்டரில் வைத்துள்ளனர். விரைவில் ஜோவன்னா தனது குழந்தைகளுடன் வீடு திரும்பலாம் என மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஸோஃபியுடைய தேர்வு - Sophie's choice என்று ஒரு அமெரிக்கப்படம். அதில் ஒரு கட்டம், தேர்வு செய்ய வேண்டியிருப்பதன் இக்கட்டைச் சொல்கிறது. யூதர்களை நாஸிகள் வேட்டையாடிக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள். போலந்து நாட்டைச் சேர்ந்த யூதத் தாய் ஸோஃபீ. கைதிகள் முகாமில், அவளது இரு குழந்தைகளில் ஒருவரையே உயிரோடு விடலாம், யாரை உயிரோடு விட்டுவைப்பது என்று நாஸிகள் அவளைக் கேட்கிறார்கள். "என் மகனை விட்டுவிடுங்கள்" என்று தாய் கெஞ்சுகிறாள். கடைசியில் இரு குழந்தைகளையுமே அவர்கள் கொன்றுவிடுகிறார்கள். அந்தக் கட்டத்தில், அவள் செய்ய வேண்டியிருந்த ஒரு தேர்வு அவளை எப்படி வாட்டி வதைக்கிறது என்பதுதான் விஷயம். – **அசோகமித்திரன்**

கொஞ்ச காலத்துக்குமுன் காலமான ஆட்ரி ஹெப்பான் ஓர் ஒப்பற்ற நடிகை. ஓர் அனாதை போன்று தோற்றுவிக்கும் முகம். வெள்ளை நிறம் என்பதை மட்டும் மறந்துவிட்டால், ஓர் அழகிய சோமாலியா குழந்தை போன்ற தோற்றம். நடித்த படங்களின் குணச்சித்திரங்களும் அப்படியே. 'Roman Holiday' படத்தில் சலிப்புற்ற பிரிட்டிஷ் அரசி, 'War and Peace' நடாஷா, 'Nun 's Story' படத்தில் காயமுற்ற எதிரி ஜேர்மன் இராணுவ வீரனை குணப்படுத்த வேண்டிய நர்ஸ், யாரைக் காதலிக்கிறோம் என்பதையே தெரிந்து கொள்ளாத பெண்பாத்திரம் Sabrina Fair, My Fair Lady எலிசா, தான் ஒரு சிவப்பிந்தியப் பெண்ணா அல்லது வெள்ளைக்காரப் பெண்ணா என்ற தீர்மானத்துக்கே வராத பெண் Unforgiven படத்தில். கடைசியாக நம்மூர் இயக்குநர்களைக் கவர்ந்த Wait Until Dark. அபாண்டமாக பழி சுமத்தப் பெற்றாலும் கம்பீரத்தைக் கைவிடாத Loudest Whisper படம். இத்தனை படங்களிலும் அவருக்கு ஏகதேசம் ஓர் அனாதை மனப்பான்மை கொண்ட பாத்திரங்கள்தாம். கடைசிக்காலத்தில் சோமாலியாக் குழந்தைகளுக்கு உதவி புரிய அவர் நியமனம் பெற்றது தற்செயல் அல்ல.

ஆட்ரி ஹெப்பரின் தமிழ் எழுத்தாளர் சுஜாதா கதையிலும் நடித்திருக்கிறார். படம் Charade. உடன் நடித்தவர் Cary Grant. சாதாரண மர்மக் கதைதான் என்றாலும் நடிப்பைப் பொறுத்தவரை விரல் மடக்க முடியாது. எதற்கும் தூண்டில் கதைகளைப் படித்து புதையலைக் கண்டுபிடிக்கலாம்.

– **மா.அரங்கநாதன்**

ரீட்டா ஹேோவொர்த் – 40 களின் பிற்பகுதியில் உலக ரசிகர்களை மயக்கிய நடிகை. நாடோடிக்குறத்தி (ஜிப்ஸி) நடிப்புக்கு இந்திய நடிகைகள் எல்லோர்க்குமே ஆதர்சம் இவர்தான். உலகத் திரைப்படத்தின் மகா கலைஞன் எனப்படும் ஆர்ஸன் வெல்ஸை திருமணம் செய்து விவாகரத்துப் பெற்றுக்கொண்டு உலகப் பணக்கார முஸ்லிமான அலிகானை மணந்து கொண்டார். ஆர்ஸன் வெல்ஸ் பற்றி ரீட்டா கூறியது: "ஒரு மேதையை யாரும் மணந்துகொள்ளக் கூடாது." – **அசோகமித்திரன்**

தீயதென்பதே இல்லாத சுத்தமான மனிதன் உலகாயதச் சூழ்நிலையில் சுத்த முட்டாள் என்றுதான் கணிக்கப்படக் கூடும். இதுதான் டொஸ்ரோயெவ்ஸ்கியின் "முட்டாள்" நாவல். இதன் விரிவு அமெரிக்கப் பேசாப் படங்களில் முயற்சி செய்யப்பட்டது. எந்தச் சந்தர்ப்பத்திலும் தூயதையே நினைத்து, தூய்மையாகவே செயல்படும் ஒரு பாத்திரத்தை ஃபிராங்க் கோப்ரா இயக்கத்தில் ஹாரி லாங்டன் என்ற நடிகர் மிக வெற்றிகரமாக வடிவம் கொடுத்துக் காட்டினார். "உலகத்தின் மிகச் சிறந்த நகைச்சுவை நடிகர்" என்று பலர் லாங்டனைக் கொண்டாடினார்கள். தூய்மை – நகைச்சுவைக்குப் பொருத்தமானது என்பதே உலகக் கணிப்பு. – **விட்டல்ராவ்**

ஒரு இயக்குநருக்கு அவர் முடிக்கும் ஒவ்வொரு படமும் ஒரு முழு வாழ்க்கைக் காலம் போலத்தான். நான் அத்தகைய முழு வாழ்க்கையைப் பலமுறை வாழ்ந்திருக்கிறேன். ஒவ்வொரு படத்தின் போதும் வேறுபட்ட வாழ்க்கை முறையை அனுபவித்திருக்கிறேன். படத்தில் வரும் பல்வகைப்பட்ட பாத்திரங்களுடன் நான் ஐக்கியமாகி விடுகிறேன். அவர்களது வாழ்க்கையை வாழ்கிறேன். இதனால் புதிய படத் தயாரிப்பில் இறங்கும்போது முந்தைய படத்தின் மனிதர்களை மறக்க மாபெரும் முயற்சி மேற்கொள்ள வேண்டியுள்ளது. – **அகிரா குரொசவா**

அந்தக் காலகட்ட தமிழ் சினிமாவின் எழுதப்படாத விதி. இரு திலகங்களில் யாராவது ஒருவருடன் தான் நாயகியர் தொடர்ந்து நடிக்க வேண்டும். அணி மாறுவது அவ்வளவு சுலபமல்ல. அநேகமான சந்தர்ப்பங்களில் எம்.ஜி.ஆர். நாயகிகள், அவரால் கைவிடப் பட்டவுடன் சிவாஜி அணிக்கு மாறுவது வழக்கம். இது சரோஜா தேவிக்கு அறுபதுகளின் இறுதியிலும், ஜெயலலிதாவுக்கு எழுபதுகளின் நடுவிலும் நிகழ்ந்தது.

– **வீ.எம்.எஸ்.சுபகுணராஜன்**




# புரோகிராம்களைப் பாதுகாக்க...

உங்கள் கணினி நீங்கள் மட்டுமின்றி பலரும் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்தால், மற்றவர்கள் ஒரு சில புரோகிராம்களை மட்டுமே பயன்படுத்தும் வகையில் அமைக்க வேண்டும் என விரும்பினால், விண்டோஸ் 7 இயங்குதளம் இதற்கான வழிகளைத் தருகிறது. இதற்கு ஒரு தீர்வாக குறிப்பிட்ட புரோகிராம்களை மட்டுமே மற்றவர்கள் கையாளும் வகையில் அமைக்கலாம். (உங்களிடம் இருப்பது விண்டோஸ் 7 ஹோம் பதிப்பு என்றால் இதனைச் செயல்படுத்த முடியாது.)


விண்டோஸ் ஸ்டார்ட் மெனு செல்லுங்கள். அங்கு gpedit.msc என டைப் செய்திடவும். பின்னர் எண்டர் அழுத்துங்கள். இங்கு கிடைக்கும் User Cofiguration பட்டியலில் Administrative Templates என்பதைத் தேர்ந்தெடுக்கவும். இப்போது ஒரு புதிய பட்டியல் கிடைக்கும். இதில் சிஸ்டம் என்ற கோப்பறையில் கிளிக் செய்திடவும். இனி வலது பக்கம் இருக்கும் பிரிவில் கீழாகச் சென்று Run only specified விண்டோஸ் அப்ளிகேஷன் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

இங்கு enabled என்று உள்ள ரேடியோ பட்டனில் செக் செய்திடவும். அடுத்து Option தலைப்பில் உள்ள show என்ற பட்டனில் கிளிக் செய்திடவும். இப்போது show டயலொக் பொக்ஸ் கிடைக்கும். மற்ற பயனாளர்களுக்கான அப்ளிகேஷன் புரோகிராம்களை இயக்க ஒவ்வொரு வரியிலும் அப்ளிகே'ன் பெயர்களை அமைத்து பின்னர் ஓ.கே பட்டனைக் கிளிக் செய்திடவும். எடுத்துக்காட்டாக ஒருவருக்கு Firefox பிரவுசர் இயக்கும் அனுமதி வழங்க, ஒரு வரியில் Firefox.exe என எழுதவும். பிற பயனாளர்கள் இது போல அனுமதி வழங்கப்படாத புரோகிராம்களை இயக்க முற்செய்தால் இந்த புரோகிராம் இயங்க தடை அமைக்கப்பட்டுள்ளது என்ற செய்தி கிடைக்கும்.

# விண்டோஸ் 7 இல் Updates

விண்டோஸ் 7 இல் அப்டேட் பைல்கள் அனைத்தும் நம் கம்ப்யூட்டரில் அப்டேட் ஆகிவிட்டதா என நாம் அறிந்து கொள்ளலாம்.

விண்டோஸ் 7 சிஸ்டம் உங்கள் கம்ப்யூட்டர் இன்டர்நெட்டில் இணைக்கப் பட்டுள்ள நிலையில், தானாகவே மைக்ரோசொப்ட் தளம் சென்று, புதிய அப்டேட் பைல்களை டவுண்லோட் செய்து, அவற்றைக் கம்ப்யூட்டரில் நிறுவிக் கொள்கிறது. இந்த செயற்பாடு "Windows Updates" என அழைக்கப்படுகிறது. இந்த செயற்பாடு மேற்கொள்ளப்படுகையில், நாமாக அப்டேட் பைல்



குறித்து சோதனை செய்திடவும், அவற்றை இன்ஸ்டோல் செய்திடவும் Option தரப்படுகிறது. இதனை எப்படி மேற்கொண்டு, அப்டேட் பைல்களை இன்ஸ்டோல் செய்வது எனப் பார்க்கலாம்.

முதலில் உங்கள் கம்ப்யூட்டர் இன்டர்நெட்டில் இணைந்துள்ளதா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். அடுத்து ஸ்டார்ட் மெனு திறந்து, சேர்ச் கட்டத்தில் "Updates" என டைப் செய்திடவும். உடன் முக்கிய சில தேடல் முடிவுகளை விண்டோஸ் 7 உங்களுக்குக் காட்டும். இந்த முடிவுகளில் "Windows Updates" அல்லது "Check for Updates" என்ற லிங்கில் கிளிக் செய்திடவும். இந்த இரண்டு லிங்குகளில் கிளிக் செய்திடும்போதும் ஒரே விளைவு தான் ஏற்படும். இதன் பின்னர், Control panel y; "Windows Update" என்ற திரை காட்டப்படும். இதில் இடது பக்க பிரிவில் காட்டப்படும் check for the Updates என்ற லிங்க்கில் நீங்கள் கிளிக் செய்திட வேண்டும். புதிய அப்டேட் பைல்களுக்காக, விண்டோஸ் மைக்ரோசொப்ட் சேர்வரை அடைந்து சோதனை செய்திடும். அப்டேட் செய்யப்பட வேண்டிய பைல்கள் இருந்தால்,அவை தரவிறக்கம் செய்யப்பட்டு உங்கள் அனுமதியோடு இன்ஸ்டோல் செய்யப்படும். இல்லை எனில், "no important updates available" என்ற செய்தி காட்டப்படும்.

# கம்ப்யூட்டர் பராமரிப்பு

**நா**ம் பயன்படுத்தும் வாகனம் ஒவ்வொன்றையும் அவற்றின் ஒவ்வொரு பகுதியையும் குறிப்பிட்ட கால அவகாசத்தில் பராமரித்துக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையேல் அது ஓடாத மோட்டார் வாகனமாக மாறிவிடும்.

அதே போல கம்ப்யூட்டரிலும் சில விஷயங்களைக் குறிப்பிட்ட கால அவகாசத்தில் மேற்கொள்ள வேண்டும். அவற்றைப் பார்க்கலாம்!

1. தினந்தோறும் டெம்ப்ரரி பைல்களை அறவே நீக்க வேண்டும். இங்கு அறவே நீக்க வேண்டும் என்று சொல்வது, அவை ரீசைக்கிள் பின் என்னும்



போல்டரில் கூட இருக்கக் கூடாது என்பதுதான். இதற்கு CCleaner போன்ற இலவச புரோகிராம்கள் நமக்கு உதவுகின்றன.

2. இன்டர்நெட் இணைப்பு பெற்று இணைய நெட்வேர்க்கில் உங்கள் கம்ப்யூட்டர் இணைந்து விட்டதா! உடனே உங்கள் அன்ரி வைரஸ் தொகுப்பை அப்டேட் செய்திடுங்கள். இதனைச் சில நாட்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளலாம் என்றாலும், தினந்தோறும் நீங்கள் இன்டர்நெட் நெட்வேர்க்கில் பணியாற்றுபவர் என்றால் தினந்தோறும் கூட அப்டேட் செய்திடலாம். இதற்கென ஓரிரு நிமிடங்கள் தான் ஆகும்.

3. கம்ப்யூட்டரில் உள்ள ஹார்ட் டிஸ்க்கினை Defrag செய்வது மிக அவசியம். இதற்கான கால அவகாசம் நீங்கள் புரோகிராம்களை இன்ஸ்டோல் மற்றும் அன் இன்ஸ்டோல் செய்வதனைப் பொறுத்துள்ளது. இருப்பினும் 10 அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை மேற்கொள்வது நல்லது.

4. சிகிளீனர் போல கிளீன் மை டிஸ்க் புரோகிராம்கள் இணையத்தில் நிறைய கிடைக்கின்றன. இவற்றை டவுண்லோட் செய்து பயன்படுத் தலாம். சிலர் வாரத்தில் மூன்று முறை இதனைப் பயன்படுத்து வார்கள். டெம்ப்ரரி பைல்களை நீக்குகையில் ரீசைக்கிள் பின் மற்றும் இன்டர்நெட் டெம்ப்ரரி பைல்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனவா என்று பார்க்கவும்.

5. இன்னொரு வழியும் உள் ளது. Start,Run செல்லுங்கள். %temp% என டைப் செய்து ஓகே கிளிக் செய்திடுங்கள். உடனே தற்காலிக பைல்கள் உள்ள போல்டர்கள் அனைத்தும் கிடைக்கும். வேறு எந்த தயக்கமும் இன்றி அனைத்தும் டெலீட் செய்திடுங்கள். ஒரு சில பைல்கள் அல்லது போல்டர்கள் அழிக்கப்பட முடியவில்லை என்று செய்திகள் வரலாம். எவ்வளவு அழிக்க முடியுமோ அவ்வளவையும் அழித்திடுங்கள்.

6. விண்டோஸ் தரும் AddRemove புரோகிராம் மூலம் புரோகிராம்களை அன் இன்ஸ்டோல் செய்தால், அது அந்த புரோகிராம் சார்ந்த பைல்களை முழுமையாக நீக்குவதில்லை. எனவே இதற்கென உள்ள சில புரோகிராம்களை டவுண்லோட் செய்து பயன்படுத்தவும். http://www.revouninstaller.com/சevo_uninstaller_tree_download.html என்ற தளத்தில் இந்த புரோகிராம் ஒன்று கிடைக்கிறது.

7. நீங்கள் வைத்து அவ்வப்போது அப்டேட் செய்திடும் Anti Virus புரோகிராம் சில மால்வேர்கள் மற்றும் ஸ்பைவேர்களை நீக்கக் கூடிய திறன் இல்லாமல் இருக்கலாம். எனவே அவற்றை நீக்குவதற்கென உருவாக்கப்பட்ட புரோகிராம்களை தினந்தோறும் இயக்கவும்.

8. கம்ப்யூட்டரை கிளீன் செய்வதைப் போல அதில் உள்ள டேட்டாவினப் பாதுகாப்பதற்கும் சில நடவடிக்கைகளை குறிப்பிட்ட கால அவகாசத்தில் மேற்கொள்ள வேண்டும். எனவே தினந்தோறும் வேலை முடித்தவுடன் நாம் உருவாக்கிய மற்றும் திருத்திய பைல்கள் அனைத்தையும் Backup எடுத்து வைத்துக் கொள்வது நல்லது.

தினந்தோறும் Backup செய்தாலும், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை உங்கள் ஹார்ட் டிஸ்க் முழுவதையும் ஒரு இமேஜாக உருவாக்கி டீயஉமரி டிஸ்க்கில் வைப்பது நல்லது. இந்த இமேஜ் இருந்தால் உங்கள் ஹார்ட் டிஸ்க் கிராஷ் ஆகி உங்களுக்கு உதவ முடியாத நிலையில் இந்த இமேஜ் விண்டோஸ் இயக்கம் முதல் உருவாக்கிய பைல்கள் வரை அனைத்தும் தரும்.

# வேர்ட் டிப்ஸ்

### எழுத்துக்களை அகலப்படுத்த:


வேர்டில் எழுத்துக்களை நம் இஷ்டப்படி தலைப்புகளில் அமைக்கப் பல வழிகள் உள்ளன. இதில் ஒன்று எழுத்துக்களின் அகலத்தை அதிகரிக்கச் செய்வது. பொதுவாக முழு எழுத்தின் அளவை அதிகரிப்போம் அல்லது குறைப்போம். இது எழுத்தினை விரித்து சற்று அகலமாக்கும் வழி. முதலில், நீங்கள் அவ்வாறு அமைக்கத் திட்டமிடுகின்ற சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். பின் Ctrl+D கொடுத்து Font விண்டோவினைப் பெறவும். இதனை மெனு பாரில் Format கிளிக் செய்து முதல் பிரிவாக இருக்கும் Font என்பதனையும் தேர்ந்தெடுக்கலாம். இந்த விண்டோவில் பல டேப்கள் கிடைக்கும். இதில் Character Spacing என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். அதில் உள்ள அளவு கட்டத்தில் ஏற்கனவே 100% என இருக்கும். இதனை 200% என அமைத்து ஓகே கிளிக் செய்து பார்த்தால் தேர்ந்தெடுத்த சொல்லில் உள்ள எழுத்துக்கள் அனைத்தும் அகலமாக மாற்றப்பட்டு இருக்கும். இது உங்களுக்கு அதிகமாகத் தெரிந்தால் அகல அளவின் சதவிகிதத்தைக் குறைக்கலாம் கூடுதலாக வேண்டுமென்றால் உயர்த்தலாம்.

### திரையின் தொடக்கத்திற்கு கர்சர்:

வேர்ட் டொகுமெண்ட் ஒன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் கேர்சரை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் திரையின் தொடக்கத்திற்குக் கொண்டு செல்ல எண்ணுகிறீர்கள். அதாவது திரையில் தெரியும் டெக்ஸ்ட் ஸ்கிரீன் நகரக் கூடாது. தெரிகின்ற வாக்கியங்களில் முதல் வாக்கியத்திற்குச் செல்ல வேண்டும். என்ன செய்யலாம்? Home அழுத்தினால் வரியின் தொடக்கத்திற்கு மட்டுமே செல்லும். Ctrl + Home அழுத்தினால் அந்த ஆவணத்தின் தொடக்கத்திற்குச் செல்லும். திரையில் தெரியும் முதல் வாக்கியத்தின் தொடக்கத்திற்குச் செல்ல Alt + Ctrl + Page Up அழுத்திப் பாருங்கள். அதே போல் திரையில் தெரியும் பக்கத்தின் கீழ்ப்பாகத்திற்குச் செல்ல Alt + Ctrl + Page Down அழுத்தவும். வேர்ட் டொகுமெண்ட்டில் வேகமாக நினைத்த இடத்திற்கு நீந்திச் செல்ல விரல் நுனியில் உள்ள சூட்சுமத்தைத் தெரிந்து கொண்டீர்களா!

### வேர்ட் ரூலரில் சென்ரிமீற்றர்:

Word தொகுப்பில் Ruler ஐஒரு சிலர் மிகவும் கர்ம சிரத்தையாகப் பயன்படுத்துவார்கள். அவை தரும்




அளவுப்படி படங்களை, கட்டங்களை, அட்டவணைகளை அமைப்பார்கள். பொதுவாக வேர்ட் தொகுப்பில் ரூலர்கள் அங்குல அளவில் தான் தரப்பட்டிருக்கும். இன்று பலரும் சென்டி மீற்றரிலேயே அனைத்தையும் அளந்து வரைந்து பழக்கப் பட்டவர்களாக இருப்பார்கள். இவர்களுக்காக ரூலர் சென்டி மீற்றரில் வேண்டும் என்றால் என்ன செய்வது? எம்.எஸ். ஒபீஸ் தொகுப்பினை மீண்டும் ரீ இன்ஸ்டோல் செய்திட வேண்டுமா? தேவையே இல்லை.

முதலில் View menu மெனு சென்று Ruler என்பதில் கிளிக் செய்திடவும். இப்போது ரூலர் கோடு கிடைக்கும். இனி Tools nkD சென்று Options என்னும் பிரிவில் கிளிக் செய்தால் டேப்கள் அடங்கிய விண்டோ கிடைக்கும். இதில் General என்னும் டேபைத் தேர்ந்தெடுக்கவும். இதில் கீழாக 'measurement units' என்னும் பீல்ட் தரப்பட்டிருக்கும். அதைக் கிளிக் செய்தால் கீழாக விரியும் மெனு ஒன்று கிடைக்கும். இதில் நீங்கள் விரும்பும் அளவைத் தேர்ந்தெடுத்து ஓகே கிளிக் செய்து வெளியே வரவும். இனி ரூலர் நீங்கள் விரும்பிய அளவு அலகுகளில் கிடைப்பதால் அதனை எளிதாக நீங்கள் பயன்படுத்தலாம்.

### Tab இன் இடைவெளி அமைக்க:

வேர்ட் Ruler நமக்குப் பல வழிகளில் உதவுகிறது. வழக்கமாக Tabகளை நாம் செட் செய்கிறோம். ஒவ்வொரு Tab இற்கும் இடையே உள்ள தூரத்தினை Ruler மூலம் அறிந்து கொள்கிறோம். ஆனால் ஒரு Tab பொய்ன்ற் Ruler இன் இடது புறம் இருந்து எவ்வளவு தூரத்திலிருந்து உள்ளது என்றும் அதே போல வலது புறத்திலிருந்து எவ்வளவு தூரத்திலிருந்து உள்ளது என்றும் அறியலாம். இதற்கு Ruler இல் Tab உள்ள இடத்தில் கேர்சரைக் கொண்டு வைக்கவும். இப்போது இடது பக்க மவுஸ் பட்டனை அழுத்தவும். அதனை விட்டுவிடாமல் வலது பக்கம் மவுஸ் பட்டனையும் அழுத்தவும். இப்போது குறிப்பிட்ட Tab இரு புறத்திலிருந்தும் எவ்வளவு தூரத்திலிருந்து உள்ளது என்று காட்டப்படும்.

# தனியார் பேருந்துகளில் அதிக கட்டணம் புதுக்குடியிருப்பு பயணிகள் விசனம்

(ஒட்டுசுட்டான்)

அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள புதுக்குடியிருப்புக்கான தனியார் பேருந்துக் கட்டணங்களை அதிகளவில் அறவிடுவதாக அப்பகுதி ஊடாக பயணிக்கும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டதன் பின் யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு தனியார் பஸ் சேவைகளில் அநேகமானவை பரந்தன், புதுக்குடியிருப்பு ஊடாகவே முலலைத்தீவு நோக்கிச் செல்கின்றன.

அது தவிர வவுனியாவில் இருந்தும், கிளிநொச்சியில் இருந்தும் பேருந்து சேவைகள் புதுக்குடியிருப்புக்குப் பரந்தன் ஊடாக இடம்பெறுகின்றன. இவ்வாறு புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் நோக்கி வருவதற்கு 60 ரூபா முதல் 90 ரூபா வரை அறவிடப்படுவதாகவும் இவற்றுக்குரிய சிட்டைகள் வழங்கப்படுவதில்லை எனவும் இப் பகுதி ஊடாக பயணிக்கும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

மாங்குளம் ஊடாக ஒட்டுசுட்டான் பகுதிக்கான பேருந்து சேவைகள் குறைவாக இருப்பதாலும், கற்சிலைமடுப் பிரதேசத்திற்கான பேருந்து சேவை திங்கள் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் மட்டுமே இடம்பெறுவதாவும் இப்பகுதிகளில் கடமையாற்றும் அரச ஊழியர்களும் மக்களும் புதுக்குடியிருப்புக்குப் பயணம் செய்து பின் புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் வந்து பின் பரந்தன் சந்தியில் ஏ-9 பேருந்துகள் மூலம் யாழ்ப்பாணம் வந்து அடைகிறார்கள்.

இவ்வாறு வரும் பயணிகள் பெரும் சிரமத்தினை எதிர்கொள்வதுடன் இவ்வாறு அதிக கட்டணங்கள் அறவிடப்படுவதால் பாரிய செலவினை பஸ் கட்டணமாக செலுத்த வேண்டியுள்ளமையினால் பஸ் கட்டணங்களினைச் சீராக அறவிட ஆவண செய்யுமாறு பயணிகள் தெரிவித்துள்ளனர். (42)

## கரைச்சிப் பிரதேச...

எதிர்ப்பைத் தெரிவித்த வர்த்தககர்கள், நேற்றைய தினம் தமது வர்த்தக நிலையங்களைப் பூட்டி தமது எதிர்ப்பைத் தெரிவிக்க முற்பட்டனர். அத்துடன் நடமாடும் சேவையை நடத்த ஏற்கனவே டிப்போ சந்தியில் இடமொன்று பிரதேச சபையால் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் சந்தையில் ப.நோ. கூட டுறவுச் சங்கங்களின் மலிவு விற்பனை நடமாடும் சேவையை நடத்த அனுமதி வழங்கப்பட்ட மையானது முறையற்ற செயலெனவும், வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் வர்த்தகர்களின் எதிர்ப்பை அடுத்து பிரதேச சபையினர் பொலிஸாரின் உதவியை நாடி, சந்தைக்குப் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டது.

வர்த்தகர்களின் கடும் எதிர்ப்பை அடுத்து கனகபுரத்திலுள்ள கரைச்சி தெற்குப் ப.நோ.கூ.சங்க தலைமையகத்தில் நேற்றுக் காலை பத்துமணிக்குப் பின்னர் ப.நோ.கூ.சங்கங்கள், தமது மலிவு விற்பனை வியாபாரத்தை நடத்தின. (கே)

## மீள்குடியேற்றம்...

1711 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பதாகவும் ஏனைய குடும்பங்கள் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கி இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் பகுதியில் 10 குடும்பங்கள் நலன்புரி நிலையத்தில் தங்கி இருப்பதும் இதன்போது கண்டறியப்பட்டது.

இதன் பிரகாரம் அடுத்தகட்ட நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வதெனவும் இப்பிரச்சினைகளைப் படிப்படியாகத் தீர்ப்பதெனவும் முடிவு செய்யப்பட்டதுடன் நலன்புரி நிலையங்களில் தங்கி இருக்கும் மக்களுக்கான நிவாரணம் தொடர்பில் உரிய தீர்வுகள் எட்டப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மேலதிக அரச அதிபர் பிரதேச செயலர்கள் யாழ். மாநகர முதல்வர் பிரதேச சபை செயலாளர்கள் உட்படதுறை சார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## ஆணைக்குழுவின்...

வழங்கும் எனவும் அகாஷி தெரிவித்ததாக கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரகம் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

தற்போது ஜப்பானுக்கு சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடனான கலந்துரையாடலின்போது அகாஷி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் முன்னேற்றம் மற்றும் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் துரித அபிவிருத்திகள் குறித்து அகாஷிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விளக்கினார். வெளிநாட்டு நிதியுதவிகள், கடன்களில் 70 சதவீதம் ஏற்கனவே இப் பிராந்தியத்தின் அபிவிருத்திக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கை தொடர்பான...

உள்நாட்டு நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். பொறுப்புக் கூறுதல் மற்றும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் போன்ற விவகாரங்கள் தொடர்பில் கவனமாக ஆராயப்பட்டு, அமெரிக்க அரசாங்கத்தின் உயர்மட்டங்களில் விரிவாக விவாதிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இத்தீர்மானம் முன் வைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்த பின்னர் பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விவகாரங்களில் அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசாங்கத்துக்கு மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி சார்ந்த உதவிகளை அமெரிக்கா வழங்கியது. இந்த இலக்கை எட்ட ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழு மேலதிக உதவிகளை வழங்க முடியும் என்று நம்புகிறோம்.

ஆயினும், இத்தகைய நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்த இலங்கை அரசாங்கம், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துமாறு கோரும் தீர்மானத்தை நியாயமற்றது எனவும் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் போருக்குப் பின்னரான இலங்கையில் இனங்களுக்கு இடையில் நிலையான நலலிணக்கத்தை ஏற்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும், போர் மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவதை உறுதிசெய்வதும் சர்வதேச நாடுகளின் பொறுப்பாக உள்ளது.

இவ்விவகாரம் குறித்து எல்லாப் பிராந்தியங்களின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகளின் பின்னர் பல பயனுள்ள பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றன. இந்நிலையில் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் பல உறுப்பு நாடுகளின் விவாதங்களின் பின்னர் ஒரு நியாயமான தீர்மானத்தை நாம் முன்வைத்துள்ளோம்.

இத்தீர்மானம் ஊடாக பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விவகாரங்களில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட விரும்புவதை நாம் வலியுறுதியுள்ளோம். இவ்விவகாரம் குறித்த இத்தீர்மானத்தின் ஆரம்ப வரைபில் காலக்கெடு எதுவும் குறிக்கப்பட்டிராத போதிலும், பின்னர் இத்தீர்மானத்தில் ஒரு காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் இறுதியில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 20 ஆவது கூட்டத்தொடரில் மனிதவுரிமைகள் ஆணையாளர் ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என இத் தீர்மானத்தில் காலக்கெடு விதிக்கப்பட்டது. இக் காலக்கெடு பின்னர் 2013 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 22 ஆவது கூட்டத் தொடர் வரை நீடிக்கப்பட்டது.

போருக்குப் பின்னரான இலங்கையில் இனங்களுக்கு இடையில் அர்த்தமுள்ள நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டியதும், போர் மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவதை உறுதி செய்வதற்கும் சர்வதேச நாடுகள் ஆதரவு வழங்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் நோக்கம். இலங்கைக்கான நேரம் கடந்து கொண்டிருக்கும் நிலையில், இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேச சமூகம் அமெரிக்காவுடன் இணைந்து செயலாற்ற வேண்டும்.

இலங்கை குறித்த ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய நடவடிக்கைகள் சர்வதேச சமூகத்தின் கரிசனையை வெளிப்படுத்துவதாக உறுதியாக நம்புகின்றோம்.

இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த உறுதியான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்ற எமது கரிசனையை பல சர்வதேச மற்றும் உள்நாட்டு நோக்கர்களும் வெளிப்படுத்தியுள்ளார்கள். இத்தீர்மானத்தின் ஊடான இலக்கை அடைவதற்கு சர்வதேச நாடுகளும் தமது ஒத்துழைப்பை வழங்க முடியும் என ஜெனிவாவுக்கான அமெரிக்கத் தூதுவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஒன்பதாம் நாளில் நினைவு கூருகிறோம்



நெடுந்தீவு மத்தி மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி யேசுதாசன் லக்சினி (வயது -12) இவர் கடந்த 2012.03.03 ஆந் திகதி முற்பகல வேளையில் நெடுந்தீவு மத்தி கிராம அலுவலர் பிரிவில் (ஜே/04) பெருக்கடி வீதியில் பெருக்கடி விநாயகர் கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள குடியிருப்பு இல்லாத காணியில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டார். இதுவரை எமது தீவகம் கண்டிராத கொடுமைகளில் இக்கொடுமை மிகப்பெரியது எனலாம். இக்கொடும் செயல் போர் ஓய்ந்து தற்போது நிம்மதிப் பெருமூச்சுடன் வாழ்ந்து வரும் எம்மக்களுக்கு மிகப் பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது.

1990 ஆம் ஆண்டு முதல் இத்தீவில் எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வருகை தந்த எமது கட்சியானது எமது மக்களின் சகலவிதமான இன்பதுன்பங்களிலும் அபிவிருத்தி நடவடிக்கையிலும் பங்கு எடுத்துச் செயலாற்றி வருவது அனைவரும் அறிந்த விடயமே அந்த வகையில் கடந்த 21 வருடங்களுக்கும் மேலாக ஒன்றி உறவாடி வரும் எமக்கு எமது அன்பார்ந்த மக்கள் அளித்துவரும் ஆதரவும் அளப்பெரியது எனலாம். இப்படிப்பட்ட உறவில் சில சுயலாப சக்திகள் கரிபூசும் நடவடிக்கையே செல்வி லக்சினியுடைய இறப்புச் சம்பவமும் ஆகும். இவ் இறப்புச் சம்பவமானது நாட்கள், மாதங்கள், வருடங்கள் பல சென்றாலும் அனைவரது நெஞ்சை விட்டகலாத ஒரு சம்பவமும் பேரிழப்புமாகும். இப்படிப்பட்ட சம்பவங்கள் எமது தீவகத்தில் பெரிய அளவில் நடந்தமைக்கான ஆதாரங்களும் இல்லை, இருப்பினும் வெளியிடங்களில் இடம்பெறுவது போன்று இங்கும் நடந்துள்ளதுடன், அனைவரது நிம்மதியையும் குலைத்துள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட காம வெறியனது செயலை எமது கட்சி வன்மையாக கண்டிப்பதுடன் இப்படிப்பட்டவர்கள் எமது அமைதியான தீவில் இருப்பதற்கு அனுமதிக்கவும் கூடாது.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக மிகப்பெரிய கஷ்டங்கள் துன்பங்களையெல்லாம் தாண்டி தமது செல்வப் புதல்வியை பெரிய கனவுகளுடன் பேணி வளர்த்த அந்த பெற்றோர் உடன் பிறப்புக்கள் தற்போது எவ்வாறான மனவேதனை அடைவார்கள் என்பதை இந்த வேளையில் ஒருகணம் எண்ணிப்பார்க்கின்றோம். இவர்களுக்கு ஆறுதல் சொல்வது என்பது முடியாத காரியம். இறப்பு என்பது அனைவரும் ஏற்றக்கொள்ள வேண்டிய விடயமாக இருப்பினும் இளவயது அநியாய இறப்புக்கள் தாங்கமுடியாத அளவிற்கு இருக்கும் என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியும். அந்த வகையில் அவரை இழந்து நிற்கும் குடும்பத்தாருக்கும், தொட்டப்பா சில்வேஸ்திரி அலெண்ரின் (உதயன்) ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நா.உ மற்றும் அனைத்து உறவுகளுக்கும் பாடசாலை சமூகத்தார்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், இரங்கல்களையும் மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**தவிசாளர், உறுப்பினர்கள்,**
**நெடுந்தீவு பிரதேச சபை,**
**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி - நெடுந்தீவு.**

(C/1547)

# மண்டபத் திறப்பு விழா


புத்தூர் வடக்கு மந்திரிமலைப் பகுதியில் உள்ள தமிழ்மதி சன சமூக நிலையத்தின் பலநோக்கு மண்டபத் திறப்பு விழா இன்று காலை 10.00 மணிக்கு இடம்பெறும். இந்நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மற்றும் ஈ.பி.டி.பி. யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வலி. கிழக்குப் பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலெண்ரின் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இன்று சனசமூக நிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கப் பிரேரணையை...

அவர் மேலும் விளக்கமளிக்கையில் கூறியதாவது, மேற்குலகின் அழுத்தங்களிலிருந்து தப்புவதற்கான வழி முறைகளை நாம் கடந்த காலத்தில் கையாண்டுள்ளோம். கூடுதலான அனுகூலங்கள் எம் பக்கம் காணப்படுகின்றன. அடுத்த கட்ட அமர்வில் பங்கேற்பதற்காக எதிர்வரும் 17 ஆம் திகதி இலங்கை குழு ஜெனிவா செல்வதற்கு தீர்மானித்திருந்தது. எனினும் அமெரிக்கா அதன் யோசனையை சமர்ப்பித்துள்ள நிலையில் இதில் மாற்றம் ஏற்படலாம். அமெரிக்காவின் யோசனைகளை அரசு ஆழமாக ஆராய வேண்டியுள்ளது. மேலோட்டமாக எதனையும் உடனடியாக வெளியிட முடியாதுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றார். அவருடனான சந்திப்புக்குப் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதைக் கூற முடியும். சிலவேளை இலங்கை குழு முன்கூட்டியே ஜெனிவா செல்லவேண்டிய நிலை ஏற்படலாம். இதுவரை பல சர்வதேச நாடுகள் எமக்கு ஆதரவாக குரல் எழுப்பியுள்ளன. இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிப் பதைவிட இலங்கைக்கு இவ்விடயத்தில் போதுமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருக்கின்றன. இவ்வாறான நிலையில் நாம் இந்த விடயத்தில் அவசரப்பட்டு எதனையும் தெரிவிக்கப்போவதில்லை எனவும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

# நெடுந்தீவு படகுகளை நிறுத்த குறிகாட்டுவானில் தனியான இடம்

## நேற்றைய கலந்துரையாடலில் தீர்மானம்



(வேலணை)

நெடுந்தீவு மக்களுக்கான போக்குவரத்தை மேற்கொள்ளும் படகுகள் குறிகாட்டுவான் இறங்குதுறையில் தரித்து நிற்பதற்கு தனியான இடமொன்று நேற்று முதல் ஒதுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பயணத்தை மேற்கொள்ளும் படகுகள் குறிகாட்டுவான் துறையில் சமமான முறையில் நிறுத்த ஒழுங்கு செய்து தரவேண்டுமென படகு உரிமையாளர்கள் விடுத்த வேண்டுகோளுக்கமைய நேற்றைய தினம் ஊர்காவற்றுறை பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் ஹேரத் தலைமையில் காலை 9.00 மணிக்கு குறிகாட்டுவானில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் புங்குடுதீவு - குறிகாட்டுவான் கடற்படை அதிகாரி, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சின்னையா சிவராசா, வேலணை பிரதேச செயலர், நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் டானியல் றெக்சியன், புங் குடுதீவு பகுதி ஈழமக்கள் ஜன நாயகக் கட்சி அமைப்பாளர் நவம், ஊர்காவற்றுறை உதவி பொலிஸ அத்தியட்சகர் சில்வா, மக்கள் சார்பில் நெடுந்தீவு பிரதேச சபை உறுப்பினர்களும் நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவு சங்க தலைவர் அரியநாயகம், நயினாதீவு படகுச்சேவை சங்கத்தின் தலைவரும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் ஊர்காவற்றுறை பொலிஸ் அத்தியட்சகர் ஹேரத் நெடுந்தீவு மக்களின் குறைகளை கேட்டறிந்ததோடு, அதற்கான தீர்வும் கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களுடன் கலந்துரையாடி பெறப்பட்டன. குறிகாட்டுவான் இறங்கு துறையில் நெடுந்தீவு பகுதிக்கான படகுகளை நிறுத்துவதற்கு தனியான ஒரு இடம் வழங்க முடிவு செய்யப்பட்டதுடன் இறங்குதுறையில் மக்கள் படுகின்ற அசௌகரியங்களை மாற்ற வேண்டும் என பிரதேச சபைத் தலைவர்கள் புங்குடுதீவு - குறிகாட்டுவான் பகுதிக்கான கடற்படை அதிகாரியிடம் தெரிவித்தனர். இக்கோரிக்கை நிறைவேற்றப்படும் என கடற்படை அதிகாரி தெரிவித்தார்.

தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரத்தியேக பிரதிநிதியும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சர்வதேச அமைப்பாளருமான மித்திரன் அங்கு கருத்து தெரிவிக்கையில், நெடுந்தீவு பகுதிக்கான மக்களின் போக்குவரத்து அவலங்களுக்கு இக்கலந்துரையாடலின் மூலம் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் இதேபோல் இப்பிரதேசத்தில் இருக்கின்ற களுதைப்பிட்டி இறங்குதுறையை புனரமைப்பதற்கு அமைச்சரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து தற்போது இருக்கின்ற குறிகாட்டுவான் இறங்கு துறையை மீள் புனரமைப்புச் செய்து தர வேண்டும் என நெடுந்தீவு, நயினாதீவு பகுதி படகு சேவையாளர்கள் அமைச்சருக்கு கோரிக்கை ஒன்றையும் முன்வைத்தனர்.

இதனை ஏற்றுக் கொண்ட மித்திரன் இக்கோரிக்கையை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவேன் எனவும் தெரிவித்தார். இதேவேளை, நேற்றைய கலந்துரையாடலில் சுமுகமான தீர்வு கிடைத்தமைக்கு அமைச்சருக்கும் அமைச்சின் சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கும் மற்றும் கடற்படை, பொலிஸ் அதிகாரிகளுக்கும் பிரதேச சபைத் தலைவர்களுக்கும் படகுச்சங்க உரிமையாளர்கள் நன்றியைத் தெரிவித்தனர். (85)

### படகில் வந்தவர்கள் கைது

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு படகில் வந்த ஐவர் தீவகத்திற்கு அண்மித்த கடற்பகுதியில் வைத்து கடற்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் நேற்று ஊர்காவற்றுறை பொலிஸ் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட ஐவரையும் விசாரணைக்காக விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாக்காளர் இரட்டைப் பதிவு பதிலனுப்ப கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வாக்காளர்களாக பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அத்தகையவர்கள் எந்த முகவரியின் கீழ் தம்மைப் பதிவுசெய்வது என்ற விபரங்களை எழுத்து மூலம் கோரும் நடவடிக்கைகளை தேர்தல்கள் செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

இதனடிப்படையில் இந்த விசாரணைகளுக்கு பதில் அனுப்புவதற்குரிய கால எல்லையை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நீடித்துள்ளதாக தேர்தல் செயலகம் அறிக்கையொன்றின் மூலம் அறிவித்துள்ளது.

இரட்டைப் பதிவு தொடர்பான விசாரணைகளுக்கு குறிப்பிட்ட வாக்காளர்கள் பதிலை அனுப்பாதவிடத்து அவர்களின் பெயரை வாக்காளர் பதிவேட்டில் உட்சேர்ப்பதற்கான முகவரியை தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாக்காளர் பதிவேட்டின் தகவல்களை பரிசீலிக்கும்போது பெயர்கள் மற்றும் அடையாள அட்டை இலக்கங்களின் பிழையற்ற தன்மை தொடர்பான பிரச்சினைகள் கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை விசாரிக்க வேண்டியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# சர்வதேச அழுத்தங்கள் விசேட கருத்தரங்கு

இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்கள் தொடர்பில் விசேட கருத்தரங்கொன்று நடத்தப்படவுள்ளது. சர்வதேச ரீதியான அழுத்தங்கள் மற்றும் சவால்கள் என்ற தொனிப் பொருளில் இலங்கை அரசாங்கத்தினால் இந்தக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இந்தக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. பதில் ஊடக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இந்தக் கருத்தரங்கில் விசேட உரையாற்றவுள்ளார்.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மொஹான் சமரநாயக்க, சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி உள்ளிட்ட பலர் இந்தக் கருத்தரங்கில் உரையாற்றவுள்ளனர்.

# புங்குடுதீவில் அந்தரித்த அனலைதீவு மாணவி

(ஊர்காவற்றுறை)

புங்குடுதீவு பஸ் நிலையத்தில் வழி தெரியாது அந்தரித்து நின்ற அனலைதீவைச் சேர்ந்த சிறுமி (வயது-15) ஒருவர் நேற்று மீட்கப்பட்டு ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அனலைதீவுப் பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமி நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள நண்பரைச் சந்திக்க வந்துள்ளார். பின்னர் அவருடைய நண்பர் சிறுமியை புங்குடுதீவு பஸ்ஸில் ஏற்றி அனுப்பிவைத்துள்ள நிலையில், குறித்த சிறுமிக்கு எங்கு செல்வது என்று அறியாது பஸ் தரிப்பிடத்தில் நின்று அங்கலாய்த்துள்ளார்.

இதனை அவதானித்த பொது மக்கள், பிரதேச ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து குறித்த சிறுமி ஊர்காவற்றுறைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.







இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.